

*******************

ஓம் சக்தி

அன்புள்ளங்கள்
இணைந்து
இன்புற வளர்த்த

# முல்லைக் காடு

*

வாசனை நுகர
இன்பத்தேன் பருக
உள் நுழையுங்கள்!
இதோ!

சித்திரை வரட்டும் என்னார்
சிரிக்கட்டும் வசந்தக் காற்றில்
நித்திரை விரட்டும் இன்பம்
நிறைந்திடுங் கவிகள் சொல்வேன்.

—ஜீவா.

மான்குட்டி தாயினொடும் மகிழ்ந்தே துள்ளும்
மண்டூரின் மருங்கினிலே வளரும் பாவாய்!
ஏனெட்டி எனைப்பிடித்தாய்? என்ன கண்டாய்?
ஏமாற்றும் விந்தையினை என்னிற் காண்பாய்.

—யாழ்ப்பாணன்.




10530
MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR,
MADRAS-41.
(1957)

யாழ்ப்பாணன்

# கவிதைக் கன்னி

★

நடை துலங்க
நகை துலங்க
நறுமலரின்
எழில் துலங்க

அடி துலங்க
அணி துலங்க
அமிழ்தமெனும்
மொழி துலங்கப்

படை கலங்க
விழி துலங்கப்
பருவமகள்
கவிதைக்கன்னி

இடை துலங்க
எழில் துலங்க
இல்லையெனாக்
குறுகுவளோ.

★

ரூ. 2-50 போஸ்டல்ஓடர் அனுப்பி
உங்கள் இல்லங்களில் நிலவவையுங்கள்

---

வடலங்கா புத்தகசாலை
பருத்தித்துறை.



## முல்லைக் காடு

அட்டைச் சித்திரம்
கவினுறத் தீட்டிய
கரவெட்டி மேற்கு ஓவிய ஆசிரியர்
திரு. T. செல்லத்துரை அவர்கட்கு
எமது உளங்கனிந்த நன்றி

ஜீவா-யாழ்ப்பாணன்
கவிதை அஞ்சல்களும்

**ஜீவா — ராஜபாரதி — யாழ்ப்பாணன்**
கவிதைகளும் இணையுறும்

# முல்லைக் காடு

(மூவர் காவியம்)

அன்பு சுரக்கும்
இன்பம் சொட்டும்
ஓர் புதுமை இலக்கியம்

○

*இதோ!*

**என் ஜீவா**

*உன்னருங் கவிதை யஞ்சல் உளத்தினி லமுத மூற்றும்*
*பின்னொரு போதை யேற்றும் பேசியே கொஞ்சி நிற்கும்*
*இன்னவை யதனிற் கண்டேன் எழிலுருத் தோற்றங் கண்டேன்*
*அன்னையுன் மொழிக ளென்றும் அவனியில் வளர்ந்து வாழி!*

—யாழ்ப்பாணன்.

வளர்ச்சி:

**கலாபவனம்—பருத்தித்துறை.**

முதற்பட்சி............தை 1957

*Rights Reserved*

| | | | |
|---|---|---|---|
| விலை தனிப்பிரதி | — | ரூ. | **1-50** |
| தமிழ்த் தங்கைமாருக்கு | — | ரூ. | **1-00** |
| விசேட ஆதரவாளர்க்கு | — | ரூ. | **5-00** |

கலாபவன அச்சகம், பருத்தித்துறை.

# முல்லைக்காடு மலர்கின்றது!

அஞ்சாமற் கோணாமல் உள்நுழையுங்கள்.

○

### இதோ
### என் தங்காய்!

தேன்சொட்டத் சுவைசொட்டத் திருவுஞ் சொட்டத்
தித்திக்குந் தீந்தமிழும் சேர்ந்து சொட்ட
வான்சொட்டும் அமிழ்தூறும் வடிவ வாயால்
வையத்திங் கெனையண்ணா வென்றே கூறும்
மான்குட்டி தாயினொடும் மகிழ்ந்தே துள்ளும்
மண்டூரின் மருங்கினிலே வளரும் பாவாய்!
ஏனெட்டி எனைப்பிடித்தாய்? என்ன கண்டாய்?
ஏமாற்றும் விந்தையினை என்னிற் காண்பாய்!

-யாழ்ப்பாணன்

★

ஆனால் முல்லைக்காடு உங்களை ஏமாற்றமாட்டாது!
தயங்காதீர்கள்! முன்செல்லுங்கள்!

# அர்ப்பணம்


○

அன்பு தோய்ந்த இந்த ஏட்டினைத்
தமிழ்த்தங்கைமாரின் பூங்கரங்களிலும்
கலாரசிகர்களின் அன்புள்ளங்களிலும்
சமர்ப்பிக்கின்றோம்.

★

முல்லைத் திணையின் முருகார்பூங் காட்டுநறை
அள்ளிச் சுவையுண்ண அர்ப்பணித்தோம்—தெள்ளுதமிழ்
நாட்டு ரசிகர்குழாம் நல்லா தரவெமக்குக்
காட்டி வளர்ப்பீர் கவி.

—"ஜீவா"



# செஞ்சொற் கவிதைகள்!

—O—

கவிதை என்பது உள்ளுணர்வின் சொல்லோவியமே. கவிதை கவிக்கண்ணிற்கே நன்று புலனாகும். இன்று தமிழுலகில் ஏராளமான கவிச்செல்வர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் நமது யாழ்ப்பாணன் ஒருவர். யாழ்ப்பாணன் கவிதையில் அழகும் ஆர்வமும் இருக்கின்றன. யாழ்ப்பாணன் கவிதைகளை மகிழ்வுடன் வரவேற்கிறேன்.

ஐந்திணை யுலகின்
அழகினைத் திரட்டிப்
பைந்தமிழ் குயில்கள்
பாடுக நன்றே!

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

- சுவாமி சுத்தானந்தபாரதி

---

பாட்டிசைப்போம் பண்ணொலிப்போம் பறந்துவெளி திரிந்திடுவோம்
கூட்டிசைப்போம் குதுகலிப்போம் குயிலினமாய்க் குலவிடுவோம்
நாட்டிலுறு வளங்களெலாம் நமதுயர்ந்த செல்வமடி
மேட்டளந்து காட்டளந்து விண்ணளந்து விரைந்திடுவோம்.


—யாழ்ப்பாணன்

## என் உயிர் அண்ணா!

யாதொன்றும் அறியா என்னை
யாழ்நகர் அறியச் செய்து
மாதருட் கவிதை பாடும்
மாங்குயி லாக்கி வைத்த
தீதிலாப் பெருமை யீந்த
தெய்வம்நீ! தேய மெல்லாம்
ஆதவன் பிரபை போலுன்
அறிவினைப் பரப்பி வாழி!

—ஜீவா





அனைவரும் இங்கு க்ஷேமம் அண்ணியும் மற்றும் பேரும் —பக்கம் 11

**என் ஜீவா!**

பொற்கொடி எமக்கு மக்கள்
புவியினி லைவ ராவர்
நற்றவப் புதல்வி நால்வர்
நன்மகன் கண்ண னொவான்.

—யாழ்ப்பாணன்
10-4-55

**என் அண்ணா!**

யாங்களும் வருமோ மந்த
யாழ்நகர் அழகு துய்க்க
மாங்கனிக் கன்னங் கொண்ட
மருகியைக் கொஞ்ச …… ……

—ஜீவா
3-1-56



எனது குடும்பப் படம் இதோ!

அண்ணாவுக்கும் - அண்ணிக்கும் அன்பளிப்பாக
கலாபவனத்தின்
முகப்புச் சுவரை இதுவும் அலங்கரிக்க வேண்டுமென்பது
எனது பேரவா.

—ஜீவா (பக்கம் 19)

குயில் கூவி அழைக்கின்றது!
யாழ் சேர்ந்து ஒலிக்கின்றது!
அன்புள்ளங்கள் இணைகின்றன!
அமுதகானம் பொழிகின்றன!

இப்பண்பில் விளைவுற்றதுதான்

# முல்லைக் காடு

ஒருகோடி கவிபாடி உரையாடி யுங்கள்
அருகோ டிருந்துதமிழ் அமிழ்துண்ண ஆசை
முருகோடி நடமாடு முகமேவு மண்ணு!
வருவேனென் துணையோடு வருகின்ற ஆண்டில்.

—ஜீவா

**என் பிரிய தங்காய்!**

*அழகோடித் தமிழ்பாட மகிழ்வாடு முன்றன்*
*பழமாடு சுவைமேவு பாவிதழைக் கூட்டி*
*மழையோடு மாருடிக் கவிபாடு நங்காய்!*
*விழைவோடு வருவேனுன் விருந்துண்ண மிகவே!*

—யாழ்ப்பாணன்

# தங்கையின் அபிலாசை!

## முல்லைக்காட்டில் ஓர் தளிர்

*......ஓர் அழகிய கவிதைத் தொகுதி "முல்லைக்காடு" வெளியிடவேண்டுமென்று ஆசைப்படுகின்றேன். இந்நூலின் நோக்கம் பணம் தேடவேண்டு மென்பதல்ல. இலக்கியம் நாட்டில் பரவல் வேண்டும். நாம் இறந்தாலும் இலக்கியப் பாதையில் நாம் கொண்டிருந்த தொடர்பு இறக்கக் கூடாது என்பதே அண்ணா! ஆனால் பொருளாதார நிலைதான் ... எனவேதான் அண்ணாவைக் கெஞ்சுகின்றேன்.*

★

*சவக்குழியி லென்னாகஞ் சாய்ந்தாலு மண்ணா*
*சிவக்கொழுந்தே! உன்னீகை சீவிக்கும்—தவப்பயனாய்த்*
*தாரணியி லும்மைத் தமையனாய்ப் பெற்றேனே*
*பூரணமாய்ப் பெற்றேன் புகழ்.*

—அருமைச்சோதரி
பரிமளா-ரா (ஜீவா)

## அண்ணு!

காதலனைக் கூடிக் கவியெழுதக் கற்றேனைச்
சாதனையை யாழ்ப்பாணச் சோதரனல்—பூதலத்தில்
எங்கும் பரப்பி இதம்பெற்று விட்டாற்றுன்
பொங்கும் என்நெஞ்சப் புலம்

—ஜீவா

## அண்ணு! வாருங்கள்!

○

சித்திரை வரட்டும் என்னுர்
சிரிக்கட்டும் வசந்தக் காற்றில்
நித்திரை விரட்டும் இன்பம்
நிறைக்திடும் கவிகள் சொல்வேன்
எத்தனை இன்பந் தந்தாய்
உத்தமத் தங்கா யென்றே
புத்துணர் வோடு நீங்கள்
புகலுவீ ரன்றே யின்பம்.

-ஜீவா

★

நற்பயன் கூட்டி வைத்த கவிதைத்தங்கையின் பாடல்களில் ஓர் ஒப்பற்ற தனி இன்பம்! விதவித வியப்புறு காட்சிகள்! உயிர்கொண்டு நடமாடும் உயரிய சொல்லோவியங்கள்! வசனநடையி லென்ருலோ ஓர் தனி ஒய்யாரம்! தனி லாவண்யம்! கன்னித் தமிழை அள்ளிக் கொழிக்கும் பண்பு! ஒவ்வோர் சொல்லிலும் ஒவ்வோர் வரியிலும் உருவமும் உணர்ச்சியும் மண்டி நேருக்கு நேர் உரையாடும் விந்தை! கலைவாணி உறையும் வெள்ளை உள்ளமாயிற்றே உமது உள்ளம். எனவே இவற்றில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே!

—யாழ்ப்பாணன்

உள்ளழகு, சொல்லழகு, ஒண்பொருள் நிறைந்த
கள்ளென இனிக்குநிறை காவிய மிசைக்க
வல்லசிவ தெள்ளுதமிழ வாண யாழ்ப்பாண!
முல்லைவன மாட்சிகொள் முயற்சிநனி வாழி!

—"ராஜபாரதி"

# முல்லைக்காடு

## விருந்து கொள்வீர்!

அரும்புது முல்லைக் காடு!
அற்புத அழகு காண
விரும்புவோ ருள்ளே வந்து
விதவிதச் சுவைகள் பெற்றுத்
திரும்புவீர்! தேறல் மாந்தித்
தித்திக்குந் தமிழைத் துய்த்தே
விருந்தினில் மகிழ்வு கொள்வீர்!
விண்சிறப் பிகத்திற் காண்பீர்!

-ஜீவா (பரிமளா)
-யாழ்ப்பாணன்



# முல்லைக்காட்டுக் காட்சிகள்

## முதற் கூடல்

**தளிர்களும் பூங்கொத்துக்களும்**

1. ஒரு பாராட்டுப்பத்திரம் அனுப்புங்கள்! ... ஜீவா
2. என் பத்திரத்திற்கு என்ன மதிப்பு! ... யாழ்ப்பாணன்
3. எனது அபிலாசை - ஜீவிதலட்சியம் ... ஜீவா
4. நீவிர் முதலில் வருக! ... யாழ்ப்பாணன்
5. உங்கள கவிதை அஞ்சல் ... ஜீவா
6. உளத்தினி லமுத மூற்றும் ... யாழ்ப்பாணன்
7. இன்னமும் தொடர்வீர்! ... ஜீவா
8. எனது பூர்வ தவப்பயன் ... யாழ்ப்பாணன்.
9. உங்கள் அன்புக் கொடை ... ஜீவா
10. அம்மையவள் அருள் கிட்டும்! ... யாழ்ப்பாணன்
11. நின் பொன்னடிகளுக்கு வணக்கம்! ... யாழ்ப்பாணன்

## இரண்டாம் கூடல்

1. கொழும்புநகர்ப் புதினம் ... ஜீவா
2. அமர இலக்கியங்கள் சொல்லவேண்டும்... ஜீவா
3. கவிதையின் பிறப்பு ... யாழ்ப்பாணன்
4. தங்கையின் தீராத ஆசை ... ஜீவா
5. அண்ணு உதவுவான்! ... யாழ்ப்பாணன்
6. அண்ணுவின் குரல் கேட்டேன் ... ஜீவா
7. இன்கவி கேளீர் (வானெலிப்பேச்சு) ... யாழ்ப்பாணன்
8. நண்பன் உரையாடுகின்ருன் ... வி. கி. இரா.
9. அண்ணுவின் உபகரிப்புகள் ... யாழ்ப்பாணன்
10. தங்கையின் போதனைகள் ... ஜீவா
11. வங்கமும் வற்றுதலுண்டோ? ... யாழ்ப்பாணன்
12. குயில் கூவி அழைக்கின்றது ... ஜீவா
13. யாழ் ஒலிக்க மறுக்கின்றது ... யாழ்ப்பாணன்

14. உளத்துடிப்பு ... யாழ்ப்பாணன்
15. நெடுமலர்க்கரம் என் செய்யும்? ... யாழ்ப்பாணன்
16. என் உயிர் அண்ணு! ... ஜீவா
17. ஓம் சக்தி! எல்லாமீவாய்! ... யாழ்ப்பாணன்
18. மங்களம்! ... யாழ்ப்பாணன்


## மூன்றும் கூடல்

## (கவிதைப்புனல்)


1. தேவி துதி ... யாழ்ப்பாணன்
2. சக்தியின் இருப்பிடம் ... யாழ்ப்பாணன்
3. எம் தமிழ் ... வி. கி. இரா.
4. கவிதைப்பாசம் ... பரிமளா இரா.
5. உள்ளமிசைக்குது காவியம் ... வி. கி. இரா.
6. அவள் ... யாழ்ப்பாணன்
7. வேதனை தான் வேதனமோ? ... பரிமளா இரா.
8. நாமும் பிறந்தோமடி ... வி. கி. இரா.
9. மட்டக்களப்பு ... வி. கி. இரா.
10. பாதரசம் பிறந்த கதை ... பரிமளா இரா.
11. கடற்கரை குடிசை வாயிலில் ... யாழ்ப்பாணன்
12. படகோட்டியின் தீபாவளி ... வி. கி. இரா.
13. காதல் போச்சோ — "நீரா மகளிர்" ... வி. கி. இரா.
14. எங்கு காண்பாயடி? ... வி. கி. இரா.
15. வீரத் தாலாட்டு ... பரிமளா இரா.
16. கதிர்காமம் சென்று வருவாய்! ... யாழ்ப்பாணன்
17. குடிசையில் சுவர்க்கம் ... யாழ்ப்பாணன்
18. புதுமைப்பெண் ... யாழ்ப்பாணன்

## என் தெய்வமே!

என்னுளம் நிறைந்த பேறே!
இளங்கவி மதியே! வையம்
மன்னுயிர் விளிம்பில் துஞ்சும்
மதிவளர் கவிதைப் பெண்ணே!
முன்னுள தவந்தா னென்று
முற்றுற வேண்டி யெம்மைப்
பின்னியே பிணித்து வைக்கும்
பேறினை இன்று கண்டேன்.

-யாழ்ப்பாணன்

தமிழ்க்கும் வாழ்க!

பரிமளா—இராஜதுரை
'ஜீவா'

குறுமன் வெளி
களுவாஞ்சிக்குடி.
மட்டக்களப்பு.
6-4-55.

# ஒரு பாராட்டுப் பத்திரம் அனுப்புங்கள்.

ஈழத்துக் கவிமன்னர் யாழ்ப்பாணன் அவர்களுக்கு,

அன்புசால் சகோதர!

என்னுடைய கவிதைக்கு மதிப்புத் தந்த உங்கள் பெருந்தன்மைக்கு நன்றி செலுத்துமுகமாக இதை எழுதுகிறேன். தங்கள் 'கவிதைக் கன்னியை' நான் பலமுறை படித்திருக்கிறேன். எத்தனையோ கவிதைகள் என்னெஞ்சை அப்படியே திருகி ஆகர்ஷித்துக் கொண்டன. தங்கள் கவிதையுள்ளம் பரிசுத்தமானது! அமரத்துவம் பொருந்தியது! நடுநின்று எடையிட்டுத் திறமைக்கு மதிப்பு வழங்கியுள்ளது. ஆம்! எங்களைப் போன்ற கவிதை உலகில் தவழ்ந்து விளையாடும் பிஞ்சுக் குழந்தைகளுக்கு ஆதரவுகாட்டி — அனுசரணைகாட்டி—எங்களைக் கவிதாகோபுரத்தின் மேல்மாடிக்குக் கைகொடுத்துத் தூக்கிவிட வேண்டியது உங்கள் கடமைதான்! அதைத்தான் செய்தீர்கள். என்கனிந்த இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறேன்.

அண்ணு,

என்னுடைய 'அவரும்' ஒரு சிறந்த கவியுள்ளம் படைத்தவர். எனக்கு ஒரு செல்வக் குழந்தையுண்டு. அவள் பெயர் ராஜினி. தாங்கள் கண்டிப்பாக எனக்கு ஒரு பாராட்டுப் பத்திரம் அனுப்பிவைக்கும்படி கெஞ்சிக் கேட்கிறேன். உங்கள் கவியெழுதுங் கையால் வரைந்த பத்திரமொன்றைக் காண எனக்குக் கொள்ளை ஆசை! என்னைப் பெருமைப்படுத்தினல் அது அவரைப் பெருமைப் படுத்தியதாகவே முடிகிறது.

வீரகேசரி - ஈழகேசரி - சுதந்திரன் முதலிய இதழ்களில் எம்முடைய கவிதைகளை நீங்கள் படித்திருப்பீர்கள்.

உங்கள் அன்புப் பதிலை ஒரு சில நாட்களுக்குள் எதிர்பார்க்கும் தமிழ்த் தங்கை

பரிமளாதேவி - ராஜா

வே. சிவக்கொழுந்து,
"யாழ்ப்பாணன்"

"கலாபவனம்"
மேலைப்புலோலி - பருத்தித்துறை.
10-4-55.

## என் பத்திரத்திற்கு என்ன மதிப்பு?

அருமைத்தங்கை பரிமளாதேவிக்கு,

என்னருஞ் ஜீவா உன்றன்
இனியநல் ஙிருபங் கண்டேன்
அன்பினின் பெருக்கங் கண்டேன்
ஆனந்த வாழ்வுங் கண்டேன்
பொன்னினைப் பெற்று மென்ன
புவியினிற் பேறு மன்பே
இன்னுயிர் தழைக்க வைக்கும்
இல்லையேல் வாழ்வு மென்னே? (க)

பொற்கொடி யெனக்கு மக்கள்
புவியினி லைவ ராவர்
நற்றவப் புதல்வி நால்வர்
நன்மகன் கண்ண னவான்
வெற்பெனப் பாடல் கூட்டும்
வித்தகி - என்றன் தேவி
நற்குண முடையாள் மற்றும்
நவமணி யென்னும் பேராள் (உ)

கூடியே பிறந்த வென்றன்
தங்கைமா ரிருவ ரோடு
நாடியம் முறைமை பேணும்
நங்கையர் ஞால முண்டு
தேடியுங் காணு அன்பு
செகத்தினி லவரிற் கண்டேன்
வாடிநான் நிற்கும் நேரம்
வதனங்கண் டின்பங் கொள்வேன். (௩)

என்னுள மன்பா வீர்க்கும்
    எழிலுடைத் தங்கை மார்கள்
அன்னையாம் சக்தி தன்னின்
    அருந்தவப் புதல்வி அன்னார்
இன்னவே பலர்தா னீங்கும்
    இகத்தினிற் பெருகக் காண்பேன்
உன்னையு மின்று பெற்றேன்
    உத்தமி நீடு வாழி! (௩)

உமது கவிதைகளிற் சில நீர் குறிப்பிட்ட இதழ்களிற் படித்து மகிழ்ந்ததுண்டு. தமியேனது கவிதைகளுக்கு இன்னும் வேண்டிய மதிப்பை நமது சமூகம் அளிக்கவில்லை. ஆகவே எனது பாராட்டுப்பத்திரத்திற்கு என்ன மதிப்பைக் கொடுக்கப்போகின்றது? நீர் கோருகின்றமையின் எழுதி இத்துடன் இணைத்தனுப்புகின்றேன். திருப்திதானே?

அன்பு நிறைந்த அண்ணா
**யாழ்ப்பாணன்**

# எனது அபிலாசை! ஜீவித லட்சியம்!

குருமன்வெளி
**15-5-55.**

**என் அருமையான அண்ணுவுக்கு,**

*அஞ்சலிரண்டும் கிடைத்தன. கொஞ்சினேம், குலாவினேம். நெஞ்சங் குளிர - நேத்திரங்கள் மலர - அவற்றைப் பார்த்துப் பார்த்துப் பலநாழி ரசித்தோம். நன்றி! ஆம்! கோடி நன்றி!*

*கவிதையூற்றிற் கனிந்த சோதர,*

**கோடையிலே எரிவெயிலிற் காயும்போது**
**கொப்பளிக்குந் தமிழ்வெள்ளம் தோயவேண்டும்**
**வாடைதரு ஊதலிலே நடுங்கும்போதும்**
**வயந்தமிழ்க் கதிரென்னைக் காயவேண்டும்**
**பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்**
**பைந்தமிழில் அழூமோசை கேட்கவேண்டும்**
**ஓடையிலே என்சாம்பர் கரையும்போதும்**
**ஒண்தமிழே சலசலத்து ஓயவேண்டும்.**

*இதுதான் எனது அபிலாசை! ஜீவித லட்சியம்! இதற்கு உங்களைப்போன்ற அண்ணுமார் ஆங்காங்கு பிறக்கவேண்டும். அவர்கள் கருவிலே உற்பவித்த கவிதா சக்தியால் ஆட்கொள்ளப்பட்டுக் கருத்தில் ஊறுவதை - கற்பனையில்தேறுவதை ... தீந்தமிழ் மாலைகளாகக் கோர்த்து என்போன்ற பசிப்பிணி பிடித்த தங்கைமாருக்கு அளிக்கவேண்டும். அந்த ஆனந்த வெள்ளத்தில் அப்புடியே வீழ்ந்து நீச்சலாடி விளையாடும் மகோன்னதப் பேறு எனக்குக் கிடைத்துவிட்டால்... ஊண் ஏன்? உறக்கமேன்? உலகத் தொல்லைகளேன்? அண்ணு! என்னைப் பொறுத்தவரையில் தாங்கள் இரண்டாவது பிரமன்! ஆம்! கவிஞன் எத்தனையோ சூக்குமமான உயிர்ப் பிண்டங்களைப் படைக்கிருன். அந்தச் சிருஷ்டிகளில் சில முதலாவது பிரமன் தவிடு தெள்ளவேண்டிய நிலை*

மையை உண்டாக்கிவிடுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் உங்கள் கவிதைக் கன்னி. வாழையடி வாழையாக வந்த கவித்துவத்தின் பிரதிபலிப்பை அக் கன்னியின் ஒவ்வொரு விழித்துடிப்பிலுங் கண்டேன்! அனுபவித்தேன்! உள்ளூரப் பாராட்டினேன்... ஆனால் அருமை தெரியாத... வாழும் தேசமாயிற்றே இது! ...பொன்னாடை போர்த்துவான், பொற்கிளி அளிப்பான், உங்களைவிட மட்டரகமான கவிதைகளுக்கு. மேலை நாட்டில்! அதே நேரத்தில் இந்த ஈழநாட்டிலோ? சந்திரவட்டத்தில் கறையைத் தேடுவது போல - கங்காதீர்த்தத்திற் கரியைத் தேடுவதுபோல - குற்றம் உண்டோ? - முற்றும் பொருந்துமோ?... மோனை எதுகையில் முரண்பாடிருக்குமோ? - என்றெல்லாம் - ஆராய்ச்சி போடுவார்கள். எனவே

சொல்லுபவர் சொல்லட்டும் உந்தன் பாட்டில்
சுவையில்லை நயமில்லை என்று வீணாய்த்
தள்ளுபவர் தள்ளட்டும் அணியாப் பாதி
தடவியெடை போடட்டும் பரவா யில்லை!
உள்ளத்தே கொழிக்கின்ற எண்ண மெல்லாம்
ஒப்பில்லாத் தமிழ்க்கவிதை யாக்க வேண்டிக்
கள்ளமிலா நெஞ்சோடே யுங்கள் தங்கை
காத்துக்கொண் டிருக்கின்றாள் கவிதை யுண்ண...

பாடுங்கள் அண்ணா பாடுங்கள்!... சாவிற் தமிழ் படித்துச் சாகுங்கள்... உங்கள் சாம்பர் தமிழ் மணத்து வேகட்டும். நேரமில்லை என்று சொல்லாதீர்கள் .. கவிதையிற் பொலிவுறும் நம் தமிழன்னைக்காக உங்கள் சொந்த இன்பங்களைச் சிறிது தியாகஞ் செய்துவிட்டுக் கவிதை பாடுங்கள். ரசிக்க ஆள் இல்லை என்று நினைக்கிறீர்களா? இதோ நான் இருக்கிறேன். செந்தமிழைக் கள்ளத்தோணி என்று சந்தேகிக்கும் சிங்களத் தீவிலே ஒரு முன்னணி ரசிகை இதோ நானிருக்கிறேன். துணைக்கு உங்கள் அபிமான நண்பர் வி. கி. இராவும் என்பக்கவில் நிற்கின்றார். அண்ணா! பாடிக்குவித்துக் கொட்டுங்கள்!

இன்னும் எவ்வளவோ எழுதலாம். உங்களுக்குத் தொந் தரையாயிருக்குமென்று அஞ்சுகிறேன். இதன் கீழுள்ள வெண்பாவை உங்கள் துணைவியாருக்குக் காட்டுங்கள்.

**அக்காள் ஒருக்கால் அவரையுங் கூட்டிக்கொண்**
**டிக்கால் வரவும் படாதோ — எக்கால்**
**நேருக்கு நேர்பார்த்து நெஞ்சுவிட்டுப் பேசுவது**
**கூறிடுமோ நும்பேனுக் கூர்...?**

யானும் என் துணைவரும் உங்கள் இருபேரின் மழலைச் செல்வங்கட்கும் கனிந்த அன்புகூறி இப்போதைக்கு விடைபெறுகிறோம்.

**தென்னாடுடைய சிவமொன்றே உங்கள்**
**முன்னோடி யாயமை யட்டும்.**

அன்பு கனிந்த தங்கை
**ஜீவா**

# நீவிர் முதலில் வருக!

'கலாபவனம்'
1-6-55.

**நற்றவத் தங்காய்!**

உமது நிருபங் கிடைத்தது. முத்து முத்தாக மொழிகளை அள்ளிக் கொட்டுகின்றீர். உமது அஞ்சல் இயற்றமிழும் இசைத்தமிழும் சேர்ந்தொலிக்கும் கர்ணமிதத்தேன்... அதில் உமதூருக்கு வரும்படி அன்னையே! எம்மை அழைக்கின்றீர். எங்ஙன் இயலும்?

காலையில் விழிக்கும் போதும்
கண்ணயர்ந் துறங்கும் போதும்
மாலையி லிரவு மெல்லாம்
மலையென எழுத்து வேலை
ஓலையிற் பிரமன் வைத்தான்
ஒண்டொடி உறக்க மில்லை
நூலினை யாக்கல் வேண்டும்
நுண்பிழை திருத்தல் வேண்டும் (௧)

எந்திர மியங்கி நிற்ப
எழிலுறு நூல்க ளாக்கும்
சிந்தையர் அச்சு வேலை
தேர்ந்தவர் ஓய வொட்டார்
இந்தவென் நிலையி லன்னாய்
எங்ஙன்யா னுன்ற னூரில்
வந்துமை மகிழ வைப்பேன்
வருதல்நீ ரிங்கு நன்றே (௨)

பாலினைப் பழத்தை யூட்டும்
பைங்கிளி ஆசை தீரச்
சாலையி னோர மெல்லாந்
தருஞ்சிறப் பெல்லாங் காட்டும்
வேலையின் கரையில் நீண்ட
வெண்மணற் பரப்பிற் கோயில்
ஆலிலை துயின்ற அண்ணல்
அமர்தலை நமக்குக் காட்டும். (ரு.)

எனவே நீரும் நண்பனும் குழந்தை ராஜினி முதலியோரும் முதலில் இங்கு வாருங்கள். பின்னர் நேரமும் வசதியும் கிட்டும்போது அண்ணியும் யானும் மருகன் மருகிமாரோடும் உவ்விடம் வருவோம்.

அன்புடன்
**அண்ணா**

# உங்கள் கவிதையஞ்சல்

'குறுமண்வெளி'

*15-6-55*

**அன்புச் சோதர!**

நெஞ்சைக் கௌவும் நிறைதமிழ்க் கவிதை
அஞ்சல் என்கரம் அடைந்த நாட்களில்
கொஞ்சமும் நலமிலேன் கொடிய சுரத்தினாற்
சஞ்சலப் படுக்கையிற் சாய்ந்தேன்—அதனால்
நீண்ட மௌனம் நிகழ்ந்தது—நெஞ்சால்
வேண்டினேன் பணிந்து விசனம் தவிர்த்தி

புத்தக மெழுதித் தூய
புதுக்கவி புனைந்தும் ஈழ
வித்தக ரான உங்கள்
விலைமதிப் பில்லா வாழ்த்தை
இத்தரை மீது பெற்ற
ஏந்திழை ஒருத்தி நெஞ்சம்
எத்தனை இறும்பூ தெய்தும்
இதத்தினி லென்றுந் தானே

இங்கவர் உங்கள் ஏட்டில்
இலங்கிடுங் கவிதைக் கோப்பு
மங்கையில் லயித்து மென்னை
மறந்திடக் கொடுமை செய்த
உங்களைப் போன்ற பாவி
உலகினிற் கண்ட தில்லை
தங்கையின் ஆருக் கண்ணீர்
தமையநீ தவிர்த்தல் என்றோ?

அங்கென தக்காள் எம்மட்
டவஸ்தைதான் கொள்கின் றீரோ
பொங்கிடு கவிதை யாற்றுப்
புதுப்புன லாடு முங்கள்
மங்கையர்க் கின்பம் ஏது
மடியிலே துஞ்சும் பேறு
திங்களின் நிலவைக் கண்டால்
தேடுவீர் கவிதைப் பெண்ணே.

கவிதையே உணர்வு! காதற்
கனிவுறும் துணைவி! வாழும்
புவியதின் வடிவு! பஞ்ச
பூதமு மவளே கொண்டால்
அவலவாய்ச் சுருதி கூட்டி
அழுகிடத் தானோ நாங்கள்
சபையிலே மாலை மாற்றிச்
சதிபதி யானோ மையா!

காதற் 'துரை'யோடு கான்முளையுஞ் சேமமாய்
மாதென் னிருகண் மணிபோலே—பேதமற
இல்லாண்மை கொள்கின்றோம் எந்தை சிவக்கொழுந்தே
சொல்லாயோ உன்னிற் சுகம்.

வணக்கம்

தங்கை
ஜீவா

# உள்ளத்திலமுதமூற்றும்

'கலாபவனம்'
24-6-55

என் அன்பே!

முத்தென மொழியைக் கூட்டி
முழுமுழுக் கவிக ளாக
இத்தரை மீதி லென்றன்
இளங்கவி யுள்ளந் துய்க்க
அத்தனை அழகாய் அஞ்சல்
எழுதிடும் அரிய தங்காய்
பத்தரை மாற்றுப் பொன்னே
பைந்தமிழ்ச் செல்வி கேளாய்

உன்னருங் கவிதை அஞ்சல்
உளத்தினி லமுத மூற்றும்
பின்னொரு போதை ஏற்றும்
பேசியே கொஞ்சி நிற்கும்
இன்னவை யதனிற் கண்டேன்
எழிலுருத் தோற்றங் கண்டேன்
அன்னையுன் மொழிக ளென்றும்
அவனியில் வளர்ந்து வாழி!

அனைவரும் இங்கு ஷேமம்
அண்ணியும் மற்றும் பேரும்
உன்னையரு கதனிற் காணும்
நாளினை யுளத்தி லுன்னித்
தனியனை மறந்து நிற்பர்
சாதமும் சமைத்துத் தாரார்
தினமொரு கால முண்டே
ஜெகத்தினில் வாழ்வு கொள்வேன்

நண்பனுக் கெனது வாழ்த்து
நங்கையுன் மடியிற் றுஞ்சும்
கண்மலர்க் குழவிக் கஃதே
காண்முளை நீடு வாழி!
பண்புள பாடல் கொட்டும்
பரிமளா! ஜீவா! கண்ணே!
தண்மதி நிலவை யொப்பாய்
தங்காய்நீ நீடு வாழி!

அண்ணா
யாழ்ப்பாணன்

---

பின்குறிப்பு: உம்துணைவர் எமது கவிதைக் கோப்பு மங்கையில் லயித்து உம்மை இடையிடை மறந்து விடுவதாகக் குறிப்பிட்டிருந்தீர். ஆகவே

பதிதனுக் கிதனைக் காட்டாய்
பாடலிற் சொக்கிப் போவான்
மதியிழந் துன்னைத் தானும்
மறந்துமே லயித்துப் போவான்
விதவிதச் சாக சத்தால்
வித்தகா உன்றன் பக்கம்
சதிசெய்து திருப்பி வைப்பாய்
தங்காய்நல் வழியீ தாகும்.

# இன்னமுந் தொடர்வீர்

குறுமண்வெளி
15-8.55

என் அருமையான அண்ணு!

பரிவோ டனுப்பிய பாசுரங் கிடைத்தது
இருவரும் சுவைத்தோம் இன்பம் துய்த்தோம்
கரவோ களவோ கடுகத் தனையும்
உள்ளத் தறியேன் உடன்பிறந் தவர்போல்
தெள்ளிய தமிழை அள்ளி வழங்கும்
வள்ளலின் கொடையில் வஞ்ச முறுமோ
சில்லறைத் தொல்லைகள் சின்னவள் வாதை
வல்லியென் வாழ்வை வாட்டிற் றதனல்
பிந்தினேன் எழுதப் பிரியநற் சோதர
எந்தனை மன்னித் தின்னமும் தொடர்வீர்

*பொன்பூக்கள் தாங்கிவந்த போட்டிக் காகப்
புலனெடுங்கிக் கற்பனையாம் பொழிலிற் போந்து
இன்பூக்கள் சிலகொய்தும் அனுப்பி வைத்தேன்
எவ்வாறம் மாயிற்ருே அறியே னுங்கள்
பண்பார்க்கும் ஆனந்தன் பார்த்தே னந்தப்
பாகத்தை யடியோடு காண வில்லை
என்பாக்கள் விலையற்ற சரக்கா யிற்ருே
என்றேனு மறிவிக்கக் கெஞ்சு கின்றேன்

* அஞ்சலிற் குறிப்பிட்டுள்ள கவிதைகள் கவிதைப் புனல் ஓட்டத்தில் இணைவுற்றுள்ளன. ஆங்குக் காண்க.

துணைவரும் குழந்தை ராஜினியும் நலம். அவள் பெயரில் கடந்த ஞாயிறு (14-8-55) வீரகேசரியில் 'வேதனை தான் வேதனையோ' என்ற தலைப்பில் யான் எழுதிய கவிதையைப் படித்தீர்களா? அவசியம் படித்துப் பாருங்கள். எங்கள வீட்டிற்குப் பக்கத்திலுள்ள மண்டூர் முருகன் சந்நிதானத்தில் செப்டெம்பர் 1ந் திகதி திருவிழாவும் 2ந் திகதி தீர்த்தமும் நடக்கும். அற்புதமான பக்திப் பிரசாதத்தைச் சுவைக்க அருமையான சந்தர்ப்பம் அண்ணியாரோடும வந்து போகுமாறு அன்பின் கனிவோடு வேண்டுகிறேன். தங்கை வீட்டில் தமிழ் விருந்துண்ண தமையன் தடை கூறுவதா? தெண்டித்துப் பாருங்கள். குசல விபரங்களடங்கிய அழகுத் தமிழஞ்சலை ஆவலோடு எதிர்பார்க்கும

—தங்கை



# எனது பூர்வ தவப்பயன்

'கலாபவனம்'
20-8-55

அருமைத் தங்கையே!

எனது பூர்வதவப் பயன் எத்தனை எத்தனையோ உள போலும். அப்பயன்களில் ஒன்றின் விளைவு அன்னை அருளும் கவிதா சக்தி. இன்னொன்றின் விளைவு அன்னை அருளும் சகதியின வடிவங்கள் - இதுவரை எனக்குக் கிடைத்த அரிய தங்கைமார்கள். இவர்களுள் ஒருத்தியாய் உம்மையும், எல்லையில்லாக் கவிபாடும் உம்மையும இன்று பெற்றேன். ஆம்

என்னுளம் நிறைந்த பேறே
இளங்கவி மதியே! வையம்
மன்னுயிர் விளிம்பில் துஞ்சும்
வளர்வுறு கவிதைப் பெண்ணே!
முன்னுள தவந்தா னென்று
முற்றுற வேண்டி யெம்மைப்
பின்னியே பிணைத்து வைக்கும்
பேறினை யின்று கண்டேன்

இத்தகைய அருமைத்தங்கை – பெறற்கரிய பேறு - எனக்குக்கிடைத்தது ஓர் மகோன்னதப் பேறல்லவா?

மலையெனக் கவிகள் கொட்டும்
மாதுநீ பக்கல் நிற்பின்
சலசலத் தோடும் நீர்போற்
தமியனின் பாடற் றேக்கம்
உலகினி லோங்கிப் பாயும்
ஓரொரு காலம் வற்றின்
நிலமதில் நீயே தாங்கி
நேரிழை நிறைவு வைப்பாய்.

இன்பமும் இளமை வாழ்வும்
என்றுமே நிலைத்தல் நில்லா
அன்பனுக் கிதனைச் சொல்வாய்
அழிவிலா யாக்கை யேற்றல்
மன்பதை மகிழ வைத்தல்
மாரிபோற் கவிதை கொட்டல்
என்பவை எமது வாயிற்
புறத்தினி லிடித்தல் காண்பாய்!

என்னரு நண்பன் தானும்
ஏந்திழை நீயும் வந்தே
பொன்னுரை வாசஞ் சிந்தப்
புதுமுறைக் கவிக ளாக்கின்
மன்னவர் வாழ்வு மெங்கள்
வையமே யேத்தல் செய்யும்
பன்னுரைப் பாட லெல்லாம்
படியினி லாறு யோடும்

அன்புருவே! அண்ணி அண்ணு முதலியோரை மண்டூர் முருகன் விழாவுக்கு வரும்படியும் உமது இல்லத்தில் தங்கி விருந்துண்ணும் படியும் அன்பு கனிய அழைத்திருந்தீர்.

தமிழமுதம் பொழிந்துவரு மிதழைக் கூட்டித்
தரணிதனிற் பேரன்பும் மிகவே காட்டிக்
கமழுமுயர் சொற்களினுற் றமியன் தன்னைக்
காசினிதற் றமையனென அழைக்கும் பாவாய்!

இமியளவு மோய்வென்ப திகத்திற்காணேன்
என்செய்வேன் நினைதெழிலார் இல்லம் போந்து
அமிழ்தூறு மருங்கரத்தா லன்ன மேற்கும்
அந்தவுயர் நாளதுவும் அருகிற்கிட்டும்.

ஆம் அன்னையே! அந்தவுயர் நாள் அருகிற் கிட்டும். அண்மையில் கொழும்பு சென்று திரும்பியபோது உம்மை நினைந்து உமக்கு அன்பளிப்பாக வாங்கிவந்த மூன்று நூல்களும், பிறவுபகரிப்புகளும் இன்று இத்துடன் அனுப்புகிறேன். அன்புடன் ஏற்குக.

அண்ணு.



# உங்கள் அன்புக் கொடை

குறுமண்வெளி
7-9-55.

என் பிரிய அண்ணு!

உங்கள் அன்பு ததும்பும் கடிதங்களும் அபூர்வப் பரிசில்களும் கிடைத்தன. எல்லாவற்றிற்கும் என் உளம் கனிந்த நன்றி. வீட்டுவாசலில் மண்டூர்க் கந்தனின் தேர்த் திருவிழா நடைபெற்றதால் பல்வேறு ஜோலிகள்; பதில் எழுதப் பிந்திவிட்டது; பொறுத்தருள வேண்டும்.

உங்கள் முதல் நிருபம் ... அதில் உங்கள் தங்கைமாரைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதைப் படிக்கப் படிக்க எனக்கே பொறாமையாக இருக்கின்றது. "பெண்களின் அடுத்த பெயர் பொறாமை" என்முன் ஒரு மேற்கத்திய மேதை. ஆனால் எனக்கு அவ்வித பொறாமை ஏற்படவில்லை. நீங்கள் குறிப்பிடும் தங்கைமார் என் அண்ணுவிடம் கொண்டிருக்கும் பாசம் என் பாசத்தைவிடக் கூடிய எடையுடையதாகவன்றே இருக்கிறது என்று நினைக்கத்தான்....

ஆம் அண்ணு! தங்களையும் அண்ணியாரையும் மருமக்களையும் நேரிற் காணவேண்டுமென்று எனக்கும் ஆசைதான். உங்களிடம்

ஒருகோடி கவிபாடி உரையாடி யுங்கள்
அருகோ டிருந்துதமி ழுமுதுண்ண ஆசை
முருகோடி நடமாடு முகமேவு மண்ணு!
வருவேனென் துணையோடு வருகின்றஆண்டில்.

அதேபோல நீங்களும் என் அன்புக் கோரிக்கைக்கிணங்கி ஒரு நடை இங்கு வரத்தான்வேண்டும்.

கன்னல் வாய்திறந்து காரிகையாள் கோருகையில்
மண்ணில் தமையனுக்கு மாமலையும் ஓர்தடையா?

உங்கள் அன்புக் கொடையைச் சிலாகிக்குமிடத்து 'இலக்கியத்தில் காதல்' 'பெரும்பேர்முருகன்'என்னுமிரு நூல்களும் அற்புதம். 'திருக்குறளின்பம்' என்னிடமிருக்கிறது. ஒரு முறை எனக்கெழுதியறிந்து அனுப்பியிருக்கலாமே, வீண் பணவிரயமேன்? உங்கள் குமுதவாயாற்-கொஞ்சும் தமிழால்- ஓர் ஆசீர்வாதம் கூறினுற் போதுமே. அதைக் கோடிபொன்னாக மதிப்பேன் நான். என்னுடைய குடும்பப் படம் -இதோ என் அண்ணுவுக்கும் அண்ணிக்கும் அன்பளிப்பாக - கலா பவனத்தின் முகப்புச் சுவரை இதுவும் அலங்கரிக்கவேண்டுமென்பது எனது ஆவல்.

இங்கு எல்லோரும் நலம். உங்கள் அன்பர் வி. கி. இராவும் அன்பு கூறுகிருர். மருகி ராஜ்னி மாமாவில் கன்னங்களில் முத்தம் தெளிக்கிருள். யானும் எனது பணிவான வணக்கத்தைக் கூறி இதோ ஒரு சிலநாட்களுக்கு விடை பெறுகிறேன்.

மிக்க அன்புடைய தங்கை
பரிமளா - இராஜதுரை.

# அம்மையவள் அருள் கிட்டும்

'கலாபவனம்'
12-9-55.

என் அரிய தங்காய்!

உமது ஒவ்வோர் அஞ்சலிலும் தமிழமுதம் பொழிந்து வரும் உமது இதழைக்கூட்டி எம்மை உமதூருக்குவரும்படி விழைந்து விழைந்து அழைக்கின்றீர்.

பன்முறையுன் பால்வாயி னமுதஞ் சிந்தப்
பரிந்தெனையுன் னூரினுக்கு வருக வென்றே
அன்புருக வழைக்கின்ருய் அண்ணு வுன்றன்
அன்பினைத்தான் நன்கறிவான் ஆழம் காணுன்
என்புருகும் உன்மொழியில் இனிமை சொட்டும்
இதயத்தைக் கவர்ந்துமெனை வெறுமை யாக்கும்
அன்புருவே! உன்விழைவுக் கனந்தம் நன்றி
அம்மையவள் அருள்கிட்டும் வந்து காண்பேன்.

அண்ணுவின் இம்மொழிகளெல்லாம் வெறும் பசப்பு வார்த்தை - புரட்டுமொழி - ஏமாற்றும் வித்தைகள் என எண்ணுகிறீர்போலும். 'அம்மையவள் அருள்கிட்டும் வந்து காண்பேன்' என்ற ஈற்றடியை ஊன்றிக் கவனித்துத் திருப்தி பெறுக

நண்பர் அவர்கட்கும் மருகி ராஜினிக்கும் எமது அன்பு. ராஜினிக்கு மாமாவின் மேலதிக அனந்தம் முத்தம். அன்னை பராசக்தி எல்லோருக்கும் எல்லா நலன்களையும் ஈவாள்.

அண்ணு

# நின் பொன்னடிக்கு வணக்கம்!

'கலாபவனம்'
14-9-55.

**கலைவாணியே! என் கவிதைத் தெய்வமே!**

எனது தங்கைமாரோடு – சக்தியின் வடிவங்களோடு- கவிதாசக்தியைத் தூண்டிவிடும் நின்னையும் இன்று பெற்றேன். நின் அன்பும் நீடு வாழி!


உமது அஞ்சலில் ஒரு சில நாட்களுக்கு என்னிடமிருந்து விடைபெறுவதாகக் குறிப்பிட்டிருந்தீர். பல ஜோலிகள்போலும். கவிதை பாடுதலோடு கடமைகளையும் கவனிக்க வேண்டியதுதானே!

புதுப்புதுச் சோபிதத்தோடு நடைபோட்டுவரும் உமது கவிதை அஞ்சல்கள் - நயனமிர்தத்தேன் - அண்ணவுக்குத் தெவிட்டிவிடும் என்று நினைக்கின்றீரா? தித்திக்கும் தெவிட்டாத செந்தேன் அல்லவா! பரவாயில்லை. சில நாட்களுக்குத்தானே! பொறுத்திருப்போம்! ஆம்! இவ்வளவில் சிலநாட்களுக்கு நானும் நும்மிடமிருந்து அன்போடு விடைபெறுகின்றேன்!

**அழகோடித் தமிழ்பாட மகிழ்வாடு முன்றன்**
**பழமாடு சுவைமேவு பாவிதழைக் கூட்டி**
**மழையோடு மாருடிக் கவிபாடு நங்காய்!**
**விழைவோடு வருவேனுன் விருந்துண்ண மிகவே.**

என மீட்டும் உமக்கு உறுதிமொழி கூறுகின்றேன். அன்னருநாள் அன்னை அருள் புரிவாள். என தங்கையே! - நீயும் நின் குலமும் நீடு வாழி! ஏ! கவிதைத் தெய்வமே! சக்தியின் புதல்வியே! நின் பொன்னடிக்கு வணக்கம்!

—யாழ்ப்பாணன்.



# இரண்டாம் கூடல்

★

### என் தங்காய்!

*நீயெழுத அவனெழுத நீவி ரிருவீரும*
*கூவுமுயர் குரலொலிகள் குக்குலத்தின் குதூகலிப்போ*
*ஓய்வுபெற வெண்ணுமென துள்ளத்தை ஈர்ப்பதற்கு*
*ஆய்வுடனே நீரமைத்த அருங்காந்தப் பொறியதுவோ!*

—யாழ்ப்பாணன்

# கொழும்பு நகர்ப் புதினம்

குறுமண்வெளி
1-11-55

என் அருமை அண்ணனுக்கு

உங்கள் அன்புதோய்ந்த அஞ்சல் படித்தேன். படித்தேன் என்றால் ஒரு தடவையல்ல – இரு தடவையல்ல – பத்துத்தடவை படித்தேன். தெவிட்டவில்லை. தேனாயினித்தது. உடன் பதிலெழுத ஆவகாசம் கிடைக்கவில்லை. பல நாட்களாகக் கொழும்புமாநகருக்கு ஓர் உல்லாசப் பிரயாணம் செய்ய வேண்டுமென்று திட்டம் தீட்டியிருந்தோம். உங்கள் கடிதம் கிடைத்த மறுதினமே எங்கள் பிரயாணமும் ஆரம்பமாயிற்று. எனவே பதில் சுணங்கத்தானே செய்யும் மன்னிக்கவும். ஆம் அண்ணா! கொழும்புமாநகருக்குச் சென்றீரே!... அப்புதினங் கூறாமல்...... என்று தாங்கள் கடிந்து கொள்வது எனக்குத் தெரியாமலில்லை. இதோ

பூசிமினுக்கிய பூவையரை — அவர்
போட்டு மருட்டிடுஞ் சட்டைகளை
ஆசியப்பண்பின் துரோகிகளை — அகல்
ஆவண வீதியிற் கண்டேனண்ணா!

தொத்துப் பொருத்திய பின்னல்களை — மயிர்
வைத்துத் திருகிய கொண்டைகளை
சத்தற்ற காகிதச் சோடினையைத் — தமிழ்ச்
சார்பின் கொலைகளைக் கண்டேனண்ணா!

மானத்தை மூடாத சட்டைகளும் — இள
மார்பைப் பெருக்கிடுங் கட்டுகளும்
வானத்தை முட்டிடும் மாளிகைகள் — உள்ளே
வாழ்கின்ற சீரினைக் காட்டுமண்ணா!

பட்டினப் பாங்கெல்லாங் கண்டேனண்ணு — எங்கள்
பைந்தமிழ் யாழ்நகர்ப் பாவையரும்
மட்டுறு கப்பற் சரக்கினிலே — அங்கு
மாந்திக் கிடப்பதைக் கண்டேனண்ணு!

பூம்புகார் நகரத்திலே - பூங்காவனத்திலே - பூக்கொய்து ஆடிய பாவையரை - காவேரி தீரத்திலே - காதலனின் ஆர்வத்திலே கதகளி நடம்புரிந்த காரிகைகளை - செக்கர் மாலைப் போதினிலே சிந்து நதிக்கரைமிசை நிலவினிலே- பக்க வாட்டிற் தண்டுவலித்துப் படகோட்டிச் சென்ற பாவையர்களை - அந்த மகோன்னதமான மாதர் திலகங்களை- இந்த மதிகெட்ட மனம் படைத்த மாதர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் - இவர்களோடு சரச சல்லாபங்களாடிய பின தொடரும் வாலிபர்களை நினைத்துப்பார்த்தால் - இந்த இருபதாம் நூற்றுண்டில் வள்ளுவர் பெருமான் வாழ்ந்து கொண்டிருந்தால் என்ன பாடுவாரோ என்ற சந்தேகமே எனக்கு ஏற்பட்டது. விரைவில் எஞ்சிய தொடர்பு.

தங்கை
ஜீவா

# அமர இலக்கியங்கள் சொல்லவேண்டும்

குறுமண்வெளி
2-11-55

**கனிந்த இதயமுள்ள என் கவிதை அண்ணு!**

உங்களின் கவிதைகளைக் காணும் போதெல்லாம் கம்பனையல்ல; அவன் மகன் அம்பிகாபதியின் ஞாபகந்தான் எனக்கு வருகிறது. உங்கள் கவிதைக்கன்னியிலுள்ள அவள் ஓர் அபூர்வபடைப்பு. சொற்கள் லாவகமாக விழுந்திருக்கின்றன. பொருளநயம் கற்பனைச் செறிவுக்கும் சொற்கூடலுக்குமிடையே சிங்க நோக்காக அமைந்திருக்கின்றது. கவிதையின் பிறப்பையிட்டு உங்களோடு சில பேசலாம் என்று நினைக்கிறேன்.

**அண்ணு!**

என்னைப் பொறுத்தவரையில் கவிதை என்னசொல்லுகின்றதென்பது முக்கியமல்ல...கவிதை எப்படிச் சொல்கின்றது என்பதே முக்கியம். சொல்லழகையல்ல - சொல்கின்ற அழகையே நான் அபாரமாக ரசிப்பேன். வரைக்காட்சிப் படலத்தில் கம்பன் சொல்லுகின்ற அழகு - கலிங்கத்துப பரணியில் சயங்கொண்டான் கடைதிறக்கச் சொல்லுகின்ற அழகு - அம்பிகாபதி கோவையில் அவன் அமராபதியின அழகைச் சொல்கின்ற அழகு - இவையெல்லாம் உலகப் பிரசித்திபெற்ற "சேகஸ்பியர்" "Constructions" என்றே சொல்லலாம். காமத்துப்பாலை வள்ளுவன் சொல்லுகின்ற அழகைப்போல் உலகில் வேறுயாருமே சொல்லவில்லை. அவன் ஓர் நாகரிகமான காதலன்! (International Lover) என்று சொன்னுற்கூடப் பொருந்தும்.

மேற்கூறிய வகையான அமர இலக்கியங்களைத் தாங்களுஞ் சொல்லவேண்டும் என்பதே என் அவா! புதுமையும் எவரும் இதுவரை கையாளாத ஒரு பாணியும் உங்கள்

இலக்கியங்களில் நிறைந்திருக்குமானல் எதிர்காலத்தில் தாங்கள் ஈழத்தில் மட்டுமல்ல தமிழ்நாட்டிலேயே ஒரு தலை சிறந்த கவிஞராகப் பிரகாசிக்கலாம்.

பதில் படிக்க ஆவல் - பறந்து வருமென்று நினைக்கின்றேன். யானும் எங்கோனும் பிள்ளைக்கனியமுதோடு சுகமாயிருக்கிறோம். தாமும் என் தமக்கையும் மருமக்களும் அவ்வாறாக வாழத் தேவி அருள் பாலிக்கட்டும்.

வாழட்டும் எம் கேண்மை
வயங்கட்டும் தமிழகம்!

மிக்க அன்புடைய சோதரி
பரிமளா-ரா.

# கவிதையின் பிறப்பு

கலாபவனம்
5-11-55

**என்பிரிய ஜீவா, தங்காய்!**

அண்ணாவின் பொருட்டு ஆறிஅமர்ந்து அடுக்கடுக்காய்க் கோத்த மணிக்கோவை — உளத்தினி லமுதமூற்றும் அழகிய அஞ்சல் — எதிர்பாராத விதமாக விரைவிற் கிடைத்தது. பன்முறை படித்துப் படித்து இன்புற்றேன். உம்மைக்

**கவிதையின் கடலென் பேனே**
**காவியத் துறையென் பேனே**
**சுவையினி னமிழ்தென் பேனே**
**சுந்தரத் திரளென் பேனே**
**அவையினின் அணியென் பேனே**
**ஆழ்கடற் பொருளென் பேனே**
**எவையினை நோக்கும் போதும்**
**இணையுனக் கில்லைக் கண்டேன்.**

கொழும்பு மாநகர்ப் புதினம் — அங்கு நம் தமிழ்ச் சகோதரிகள் சிலரும் நடையுடை பாவனைகளில் ஆசியப் பண்பை மறந்து வாழும்வகை, உமது கவிதைகள் தத்ரூபமாய்ப் படம் பிடித்துக்காட்டுகின்றன. கவிதைக்கன்னியில் 'அவக்கல்வி என்னும் கவிதையை நீர் மட்டும் ஓர்முறைவாசித்துப் பார்ப்பின் இம்மாற்றத்துக்குரிய மூலகாரணம் புலப்படும்.

அண்ணாவின் பாடல்கள் அருமையானவை. அபாரமானவை என உமது அஞ்சலிற் குறிப்பிட்டிருந்தீர். எவ்வளவு தூரம் இது உண்மையென்பது அண்ணாவுக்கே தெரியாது.

நீர் கவிதையின் பிறப்பையிட்டு என்னோடு சில பேச விரும்பியமையின் உமக்கு இரண்டோர் புதுப்பாடல்களை அறிமுகம் செய்து வைக்கிறேன்.

வானத்தின் வீதி தன்னில்
வளர்மதி யுலாவல் செய்தே
மோனத்தை விளக்கும் வெண்மை
முழுநிலா வதனை வீசத்
தேனொத்த மொழியா யுன்றன்
சேர்க்கையென் பக்க லின்றி
நான்மெத்த நலிவு கொள்வேன்
நடுநிசி யுறக்கங் கொள்ளேன்

கள்ளிநீ மெள்ள வந்தென்
உள்ளத்திற் கலந்த தாலே
துள்ளலும் பாட்டும் விஞ்சும்
சோர்வினை யறியா வுள்ளம்
மெள்ளவே அயர்வு கொள்ளும்
வேதனைத் துடிப்புக் கொள்ளும்
எள்ளியே உலகோர் நக்க
ஏங்கிநின் றிழிவு கொள்ளும்

இவையெல்லாம் அண்ணாவின் இலக்கியத்திற காதற்பாட்டுகளல்ல. பின் என்னை?

இன்னோர் உதாரணம்

கண்ணினி லுன்றன் சாயல்
காதினி லுன்ற னோசை
அண்மையி லிருந்து காட்டும்
அன்பெலாம் நாளும் துய்த்து
விண்ணவ னெனவே யானும்
மேதினி வாழ்வு கொள்வேன்
எண்ணியென் னுள்ள மெல்லாம்
இன்றலை கின்ற தன்னாய்

என்னும் இப்பாடலை உற்று நோக்கும். 'அன்னாய்' 'அன்பெலாம்' என்னும் சொற்கள் லௌகிக இச்சையான காதல்

என்னும் கருத்தினை மாற்றி அன்புப் பெருக்கை உணர்த்து கின்றதல்லவா? எனவே இப்பண்பினதான பாடல்கள் ஒரு புதுமை இலக்கியமல்லவா? உள்ளங் கனிந்து உணர்ச்சி யொன்றிக் கவி தனது இலட்சிய தெய்வத்தை விளிக்கும் போது தங்குதடையின்றிச் சொற்கள் கூடிப் பார்ப்போர் படிப்போர் மனதிற்கேற்பப் பற்பலவிதத் தோற்றங் காட்டும். அகந்தை, இறுமாப்பு, சந்தேகம், வீண்படாடோபம் எல்லா வற்றையும் விட்டுக் கவிஞனது உள்ளத்தோடு ஒன்றிப் பார்க்கும்போது உண்மை புலப்படும். மணிவாசகப்பெருமானின் திருக்கோவையார் பக்தியில் முகிழ்கிய பாடல்களல்லவா? ஆனல் தலைவன் தலைவி பிரிவுத்துன்பத்தை தத்ரூபமாய்ச் சித்தரிக்கும் பாடல்ப் ரேலமையவில்லையா? காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிச் சொரிந்த இவை காதற்பாட்டு களில்லை, காதலில் விஞ்சிய பக்திப்பாடல்களல்லவா? பாசம், அன்பு, காதல், பக்தி என்பன அடுத்தடுத்து நிற்பவை. கவிஞனுடைய உணாச்சி யோட்டம் — உயிர்த்துடிப்பு எவ்வளவு விரைவோ அந்த இடத்தில்நின்று அவனது உள்ளத்துக் குறிக்கோளைக் காட்டும். கவிஞனது உள்ளக்குறிக் கோளை — உளப்பண்பினை நன்கறிந்து பொருள்கொள்ளல் வேண்டுமேயன்றி மாறுபாடாகப் பொருள் கொள்ளல் கூடாது. ஏன்! எமது அன்பின் வயப்பட்டமையின் நான் உம்மை அழைக்கும் பண்பு—'பாலினைப் பழத்தையூட்டும்'-'என்னுளம் நிறைந்த பேறே'—'பரிமளா, ஜீவா, கண்ணே'-என்றன போன்ற சொல்லடுக்குகள் உளக் கனிவின் பிரதிபலிப்பல்லவா? கவிதைக் கன்னியில் எமது "அருமை மாணவி"யை — மாலைக்கு மாலையில் 'ஜெகத்திலென் தெய்வத்தை' வாசித்துப் பாரும். பன்முறை வாசித்துப் பொருட் தெளிவு கொள்ளும். இதுதான் ஒரு புதுமை இலக்கியம், அண்ணவின் தனிச் சிருஷ்டி. நீர் அவாவுவதுபோல் எத்தனை எத்தனையோ புதுப்புதுப் சிருஷ்டிகளைப் படைக்கும் அவா எனக்கு மிகவுண்டு. இன்றைய சூழ்நிலையில் மனம் ஒருப்படக் காணேன். நீர் கவிதையையிட்டு என்னேடு சில பேசவிரும்பியமையின் இவற்றை எழுதலானேன்.

உமது அண்ண

**யாழ்ப்பாணன்.**

# தங்கையின் தீராத ஆசை.

குறுமண்வெளி
10-11.55.

பிரிய அண்ணு!

இனிமேற்ருன் ஒரு பிரதான விடயத்தை உங்களுக்கு எழுதப்போகிறேன். எழுதவே பயமாக இருக்கிறது...எனினும் அண்ணுவிடம் தங்கையின் அபிலாசையை வெளியிடுவதில் என்ன பயம்? யான் இதுவரை பாடிய அருமையான பாடல்கள் ஒருசிலவற்றையும் எனது துணைவருடைய பாடல்கள் ஒரு சிலவற்றையும் தங்களின் உயர்ந்த கவிதைகளில் ஒருசிலவற்றையும் ஒன்றுசேர்த்து ஓர அழகிய கவிதைத் தொகுதி – "முல்லைக்காடு" – வெளியிடவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். பத்திரிகைகளில் பிரசுரமான கவிதைகளோடு சில புதுக் கவிதைகளும் பாடி இருக்கிருேம். அவற்றையெல்லாம் புத்தகரூபத்தில் ஏற்றி அழகுபார்க்கவேண்டுமென்று உங்கள் தங்கைக்குத் தீராத ஆசை! ஆனல் பொருளாதார நிலை தான்... ...? பாரதியின் வறுமைக்கு ஒரு நெல்லையப்பர் கிடைத்ததுபோல – கல்கியின் பணமுடைக்கு ஆரம்பத்தில் ஒரு சின்ன அண்ணுமலை கிடைத்தது போல– பாரதிதாசனின் வறுமைக்கு ஓர் பாரிநிலையம் கிடைத்தது போல... ... ... தங்கை பரிமளாவின் இலக்கிய இச்சைக்கு- உயர்ந்த நோக்கிற்கு வழிநடத்த – உதவ – ஓர் "யாழ்ப்பாணன்" கிடைப்பாரா? இதன் நோக்கம் பணந்தேடவேண்டுமென்பதல்ல. இலக்கியம் நாட்டில் பரவ வேண்டும்......நாம இறந்தாலும் இலக்கியப் பாதையில் நாம் கொண்டிருந்த பாசத்தொடர்பு இறக்கக் கூடாது என்பதே அண்ணு!

உங்களிடம் ஓரளவிற்குப் பணவசதியும், சொந்தத்தில் ஒரு அச்சகமும், இலக்கிய ஆர்வமுமிருக்கிறபடியால் தங்கையின் இந்த நீண்டநாள் ஆசையைப் பூர்த்தி செய்யலாம்.

இவர் (Mr. Rajadurai) ரொம்பவுஞ் செலவாளி. 225 ரூபாவளவிற் சம்பளம் வரும். அதைவிடப் பத்து ஏக்கர் நெற்காணி எங்களுக்குச் சொந்தமாக உண்டு. அதனுல் வரும் ஆயப்பணமே ஆறுமாதத்திற்குச் சோறுபோடும். என்றுலும் எங்கள் கையில் ஒரு சதம் மிச்சம் கிடையாது. தமிழ் உபாத்தியாக ஒரு ரூபா உழைத்தால் மகாராஜா மாதிரி ஒரு ரூபாவையும் செலவு செய்வார். ஓர் கவிதைத் தொகுதி வெளியிடவேண்டுமென்ற ஆசையால் நான் கஷ்டப்பட்டு ஒரு 400 ரூபா மிச்சம் பிடித்து வைத்திருந்தேன். அதை என்னையுமறியாமல் அடித்துக்கொண்டுபோய் ஒரு றேடியோசெற் வாங்கிவந்து பூட்டிவிட்டார். அவர் 'விவரண காவியம்' வெளியிட்டதால் தமது ஆசையைப பூர்த்தி செய்து விட்டார்.

என்னுற்ருன் ஒன்றும் செய்ய முடியவில்லை. எனவே தான் அண்ணுவைக் கெஞ்சுகிறேன். அதற்காகப்

பன்னுளாய்ச் சிந்தித்துப் பாடியவென் பைந்தமிழை
அண்ணுவின் பொற்கரத்தே அர்ப்பணித்தேன்—பொன்னுக
ஏற்றுப் பதிப்பித்திங்(கு) ஈழத் திலக்கியத்தின்
ஆற்றைப் பெருக்கியருள் வீர்.

காதலனைக் கூடிக் கவியெழுதக் கற்றேனச்
சாதனையை 'யாழ்ப்பாணச்' சோதரனல் — பூதலத்தில்
எங்கும் பரப்பி இதம்பெற்று விட்டாற்ருன்
பொங்குமென் நெஞ்சப் புலம்.

சவக்குழியி லென்னுகஞ் சாய்ந்தாலு மண்ணு
சிவக்கொழுந்தே! உன்னிகை சீவிக்கும் — தவப்பயனுய்த்
தாரணியி லும்மைத் தமயனுய்ப் பெற்றேனே
பூரணமாய்ப் பெற்றேன் புகழ்.

அண்ணுவினுடைய அன்புப்பதிலை
எதிர்நோக்கும்
**சோதரி - பரிமளா, ஈா.**

# அண்ணு உதவுவான்.

நலாபவனம்,

***14-11-55***

**என் தங்காய்!**

உமது விழைவான — பணிவான — கொஞ்சு மொழியில் அண்ணுவைக் கெஞ்சிக்கேட்பது, நாம் இறந்தாலும் இலக்கியப்பாதையில் நாம் கொண்டிருந்த தொடர்பு இறக்கக் கூடாது என்பதுதானே? இதுதானே உமது பேரவா. நான் இந்த உயர்நோக்கிற்கு வழிநடத்த — எனது — நுமது — நும் துணைவரது கவிதைகள் சேர்ந்த ஓர் தொகுதி **"முல்லைக் காடு"** வெளியிட உதவுவேனு என்பதுதானே உமது ஏக்கம். இவ்வகையில் நீர் அண்ணுவுக்கு மன்ருட்டுப் பத்திரம் அனுப்ப வேண்டியதில்லையே. அண்ணுவுக்கு இது ஓர் சிறு விஷயம்.

நீர் விரும்பும் கவிதைநூல் 1000 பிரதி மட்டுமல்ல 5000 பிரதியும் அச்சிட்டுத் தரத் தயார். ஆனல் ஒன்று- இன்றைய எமது சமூகம் இத்தகைய நூல்களை ரசிக்க மாட்டாது. எனவே எமது சமூகத்திற்கு நீர் முன்னர் குறிப்பிட்டதுபோல் புதுமை இலக்கியம் வேண்டும். எமது **கவிதை அஞ்சல்கள்** இந்தவகையில் ஓர் புதுமை இலக்கியமல்லவா? உமதும் உமது துணைவரினதும் அனுமதியோடு இவற்றை நூலாக்கும் நோக்கத்துடன், கடந்த சில வாரங்களாக அஞ்சல்களெல்லாவற்றையும் ஒழுங்குற அமைக்கும் முயற்சியில் முனைந்துள்ளேன். இவ்வஞ்சல் கொடிகளின் நுனியில் பூத்துக் குலுங்கும் வண்ணம் உமது சிறந்த கவிதைகளையும், துணைவரினது கவிதைகளையும் அனுப்பி வையும். எமது கவிதைகள் சிலவும் ஆங்கு இணையும். முல்லைக்காடும் வளர்ந்து சோபிதமுற்று நறுமணம் வீசும்.

அஞ்சல்களையும், கவிதைகளையும் அழகுற ஏற்றவாறு அமைத்து முதலில் உமது பார்வைக்கு அனுப்புவேன். பின்னர் அழகிய நூலாக அச்சிட்டுந் தருவேன். இதனால் கிடைக்கும் முதலூதியமும் முல்லைக்காட்டினுள் நுழையும் அன்பர்களினது நன்கொடையும் உமக்கு அன்பளிப்பாக உதவுவேன். அஞ்சல்களைப் பிரசுரிக்கும்போது, உமது ஊரவர் – அயலவர் - எமது சமூகத்தினர் மனப்பான்மையை நீங்கள் நன்கு சிந்திக்கவேண்டும். உங்கள் இருவரின் எண்ணக் கருத்துக்களையும் தாராளமாக எழுதுங்கள், நான் ஆலோசிப்பதற்காக.

குழந்தை ராஜினிக்கும் நும்மிருவருக்கும் எனது அன்பான ஆசிகள்.

அன்புடன்

**அண்ணு**

# அண்ணாவின் குரல் கேட்டேன்!

குறுமண்வெளி,

பிரிய அண்ணா! 20-12-55

தங்கள் தேன்குரலை – தெவிட்டாத தீந்தமிழ்ப் படையலை – இரவு ஆகாசவாணி பரிமாறியபோது உண்மையாகவே இறும்பூதெய்தினேன். ஒன்று அண்ணாவின் குரலை – அமுதமொழியை அப்படியே கேட்கும் பாக்கியம். இன்னொன்று எனது அண்ணாவை இந்த அளவிற்காவது இச் சிந்தையற்ற சமுதாயம் மதிக்கத் தொடங்கியிருக்கிறதே யென்று! அதற்காக இதோ என் திரிகரண சுத்தமான பாராட்டுக்கள். அண்ணா! அஞ்சல் எழுதலாம் என்று நினைக்கும்போது தங்களுக்கு அதை வாசிக்க நேரம் கிடைக்குமோ என்ற பயமும் குறுக்கிட்டது. அதன் விளைவே இவ்வஞ்சல் அட்டை. இவருடைய பொங்கல் நாடகமொன்று 15-1-56 மதியம் 12 மணிக்கு நடக்கும் தமிழ்த் தென்றலில் ஒலிபரப்ப இருக்கிறது. அதனையும் கேட்டுப் பாருங்கள். உங்கள் கடிதம் படிப்பது கரும்பு தின்பதைப் போல, வேறு என்ன? புதுவருட நல்லெண்ணங்களுடன்.

அன்பு மிக்க

**தங்கை**

# இன்கவி கேளீர்!

'யாழ்ப்பாணன்'

அன்னையே உன்னை நாடும்
அடியனைக் கடைக்கண் நோக்கிப்
பொன்னொடு புகழும் நல்ல
பொய்யிலா வாழ்வு மீவாய்
உன்னருந் தாளே யன்றி
உலகினிற் சுவர்க்கம் வேண்டேன்
கன்னலே! கலைஞர் போற்றும்
கற்பகத் தருவே! வாழ்வே!

இன்று ஈழத்தில் கவிஞரையும், கலைஞரையும், பேச்சாளரையும், எழுத்தாளரையும் போற்ற ஒரு சாரார் முன் வந்திருப்பது மகிழ்வுக்குரியது. இலங்கை வானொலி நிலையமும் இப்பணியில் அருந்தொண்டு புரிந்து வருகின்றது.

உள்ளத்தில் உணர்ச்சி பொங்கும்போது எண்ணமும் ஒன்றுகூடக் கவியுள்ளத்தில் கவிதை சுரக்கின்றது. கவிஞன் தன்னை மறந்து கவிதைகளைக் கொட்டுகின்றான். கவிஞரையும் கவிதையையும் பழங்காலந் தொட்டுப் போற்றி வளர்த்தது தமிழ்நாடு. மண்ணும் பொன்னும்- கரியும் பரியும் ஏன்! தம்மையும் கவிஞர் பாதங்களில் அர்ப்பணித்து அடி பணிந்தனர் தமிழ் மன்னர்.

கவிதையை அறியவேண்டுமாயின் கவிஞனை அறிதல் வேண்டும். உண்மையான ஆர்வத்தோடு, படாடோபத்தை யெல்லாம் தூரத்தே விட்டுக் கவியுள்ளத்தோடு மக்களும் ஐக்கியப்படுதல் வேண்டும். அப்போதுதான் கவிஞனுள்ளத்திலே — உண்மை ஒளியிலே — உணர்ச்சிப் புயலிலே மக்களும் ஒன்றிக் கவிதையை ரசிக்க முடியும். இவ்வாறின்றேல் விதம்விதமான பல கருத்துக்கள், மாறுபாடான எண்ணங்கள் தோற்றலும் கூடும். உதாரணமாகக் கவிதைக் கன்னி

யில் காட்சியளிக்கும் தமியேனது அருமை மாணவியைப் பாருங்கள். அவள் எனது உள்ளத்தோடு ஒன்றி விட்டாள். ஆனால் அவள் எனது காதலியல்ல; அருமை மாணவி! பச்சிளங் குழந்தை! யான் காண்கின்ற வகையில் அவளின் பண்புகளைக் கேளுங்கள்.

வெண்ணிறப் பூவே யென்ன
விளங்குநல் மனத்தாய் தூய
பண்ணிறை மொழியாய் என்றன்
பச்சிளங் குழந்தை போல்வாய்
கண்ணிறை மணியாய் மென்மை
கனிந்ததோர் நடையாய் நாளும்
அண்மையி லமர்ந்தே செம்மை
அருங்கலை பயின்ற பாவாய்

ஓய்வின்றி ஓடி யோடி
ஒருகண மொழிவு மின்றி
மாயிரு ஞாலந் தன்னில்
மதியிழந் தலையு மென்னை
நீயுநின் தந்தை தாயும்
நீடிய அன்பு காட்டித்
தூயவுன் சமூகந் தன்னில்
தோகையே சேர்த்தும் வைத்துக்
கலைபல பயிற்றி வைத்தீர்

ஆம்! நீயோ பெரிய நீதியரசனின் மகள். யானுமோ நினக்கு வேதனத்துக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்கவில்லை. ஆனால் நினது அன்பின் பிணைப்பை அறுக்கவும் முடியவில்லை.

கலைபல பயிற்ற வைத்தீர்
காரிகை நீயு மென்னில்
மலையென மதிப்புக் காட்டி
மாறிலாக் கலைகள் கற்றும்

அலையுமென் மனத்தை யுன்றன்
அன்பினாற் பிணித்து வைத்தும்
நிலமிசை நீயு மென்றன்
உள்ளத்தில் நிறைவுங் கொண்டாய்.

இவ்வாறு எனக்கும் அருமை மாணவிக்குமுள்ள உறவு மொத்தம் ஆறு பாடல்களில் தொடர்ந்து செல்கின்றது. பெரிய இடத்துப் பிள்ளையல்லவா? எனவே மதிப்புக்கு மதிப்பு காட்டினீர்களெனச் சில அன்பர்கள் முணுமுணுப்பது தமியேன் காதுகளில் வீழ்கின்றது. கவியுள்ளத்திற்கு அரசனும் சரிதான் ஆண்டியும சரிதான. இதோ ஓர் ஏழைப் பெண் — வயோதிப மாது — ஹரிஜனக்குலம் — எனது கண்கண்ட தெய்வமாகிறாள்.

தோலெலாஞ் சுருக்கம் கண்டு
சுடரொளிக் கோலம் வற்றிக்
காலிரண் டுறுதி யின்றிக்
கையிலோர் கோலு மூன்றிச்
சாலையில் மெல்ல வூரும்
தளர்வுறு கிழவி தன்னை
மாலையி லோர்நாட் கண்டு
மறித்துமென் வண்டி நீங்கிப்

பாட்டியுன் வறுமை தீர்க்கும்
பாரினில் மக்க ளுண்டோ
வாட்டமிங் ககற்றி வைக்கும்
வளர்வுறு சுற்ற முண்டோ
வீட்டினை விட்டு நீங்கி
வீதியே னலைந்து நிற்பாய்
நாட்டம்நீ நவில்வை யாயின்
நானுமிங் குதவி செய்யும்

என்றுகல் லன்பி னேடும்
இதயத்தின் துடிப்பி னேடும்
குன்றிய பார்வை கொண்ட
கூனுடைக் கிழத்தை நோக்க
இன்றெனக் குதவுஞ் சுற்றம்
இகத்தினி லொருவ ரில்லை
மன்றுள்நின் றுடு மையன்
மற்றுமுன் போல்வா ருண்டு.

இவ்வாறு எனது அன்பின் வயப்பட்ட அன்னை — கூனுடைக் கிழம் - தனது வறுமையை — ஆதரவின்மையைக் கூறலும் யானும்........ அன்னார் கையில்

இருந்துதான் நடுக்கங் கொள்ளும்
பன்னத்தா லிழைக்கப் பெற்ற
பழையதோர் பெட்டி தன்னுள்
என்மனம் நைந்து நானும்
இரண்டொரு வெள்ளிக் காசை
அன்னைநீ யேற்பா யென்றே
அன்பினே டிட்ட போது

அப்பனே நீடு நல்லாய்
அவனியில் வாழ்தி யென்று
பொக்கைவாய் தன்னுற் பாட்டி
பூரிப்பி னேடும் கூறத்
தப்பிலா ஆசி தன்னல்
தலத்திலோர் மகிழ்வுங் கண்டேன்
நெக்குநின் றுருகு முள்ளம்
நிறைவுமொன் றடையக் கண்டேன்.

இதன்பின் பாட்டிக்கும் எனக்குமுள்ள உறவு யான் அவளின் தெய்வம் — அவள் என் தெய்வம் ஆனேம்.

தானமே தவம தாகும்
தரணியி லீடு மில்லை
வானமும் வையங் காண்பாய்
வழங்கிநீ வாழ்வை யாயின்
கூனுடைக் கிழமே தெய்வம்
கொடும்பசி யுற்றோர் தெய்வம்
ஏனிதை அறித லின்றி
ஆலயம் இரந்து நிற்பாய்.

தமியேனது மாலைக்கு மாலையிலும், கவிதைக் கன்னியிலும் இக் கண்கண்ட தெய்வம் காட்சி யளிக்கிறாள்.

கவிதை புனையும் ஆற்றல் தமியேனுக்கு ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னரேயே கிட்டியதாகும். இலக்கணம் கற்று. அணியையும் யாப்பையும் துருவி — மோனையும் எதுகையும் தேடி- சொற்களை வலித்துப் பிணைத்துத் தமியேன் கவிபாட முன்வரவில்லை.

இலக்கணம் கற்றே னல்லன்
இலக்கிய அறிவு மில்லே
நலத்தினில் மிக்க தென்று
நான்புனை பாட லெல்லாம்
கலத்தினை வளர்க்குஞ் சக்தித்
தாயவ ளருள தாகும்

பராசக்தியின் அருள் — பற்றுதலுடையோரின் கனிந்த உள்ளன்பு — இதயத்தை ஈர்க்கும் காட்சிகள் - இடையிடை மனத்திலெழுந் தோற்றங்கள் — கற்பனைகள் ஆதியன தமியேனது கவிதைகளின் ஊற்று நிலையங்களாகும். அன்னை பராசக்தி - கம்பனுக்கும் - காளிதாசனுக்கும் - படிக்காசனுக்கும்-பாரதிக்கும் அருள் சுரந்த பெருமாட்டி, கமலத்தை மலரச்செய்யும் கதிரோன் ஆம்பலையும் மலரச்செய்வதொப்பத் தமியேனிடத்தும் தனது கடைக்கண் பார்வையைச் சிறிது செலுத்தினாள். அன்னையை-அவளருளைப் போற்றித் துதிக்கும் எனது பாடல்கள்-

உள்ளத் துறைந்து பெருக்கெடுக்கும்
உணர்தற் கரிய ஒளிப்பிழம்பே!
தெள்ளத் தெளிந்த தமிழ்வாணர்
தினமுந் திளைக்குங் கலைக்கடலே!
வெள்ளைக் கமலம் வீற்றிருக்கும்
விரைசேர் பதத்தாய் பெருமாட்டி
அள்ளிப் பொழிவாய் அருட்பொழிவே
அகில மளிக்கும் ஆரணங்கே!

ஆம்! அன்னையே! பராசக்தி! அடியேனுக்கு நீதான் எல்லாமாய்,விளங்குகின்றாய்-

நீயென் உடலம் உயிரானாய்
நினைவும் நனவும் நீயானாய்
ஆயும் கலைகள் நீயானாய்
அரும்பொன் மணியும் நீயானாய்
தாயும் சேயும் நீயானாய்
தமரும் பிறரும் நீயானாய்
ஓய்வும் உழைப்பும் நீயானாய்
ஒடுக்கம் உன்தாள் ஒன்றுகவே.

இக்கவிதைகள் தமியேன் சிறிதுகால எல்லையில் தொகுத்து வெளியிடவிருக்கும் 'தமிழ்த் தெய்வம்' என்னும் நூலின் ஆரம்பமாகும். தமியேனது கவிதைகள் - அஞ்சலிப பாடல் - நாட்டின்பக்தி - இதயத்துடிப்பு- காட்சி-மேதினிப்பெரியார் - பாலர் கீதம் - வாழ்த்துக்கள் எனப் பல துறைகளிலும விரவியுள்ளன. இயற்கை, இதயத் துடிப்பு, மேதினிப் பெரியார் என்னும் பகுதிகளில் சிலபாடல்களைத் தொடர்ந்து அன்பர்கட்கு எடுத்துக்காட்ட அடியேன் விரும்புகின்றேன். பாடலைப் பண்ணோடு படிக்கும்போதுதான் அதன் சுவை மக்களுள்ளத்தில் நன்கு பதியும். அவ்வாறு பண்ணோடு படிக்கும் வன்மை தமியேனிடத்துப் பொருந்தவில்லை. இன்

ளோர் சந்தர்ப்பத்தில் அவ்வாறு பண்ணோடு படிக்கும், அன்பர்களினது உதவிகொண்டு இக்குறையை நீக்க முயலு வேன். இன்று நேரமும் சந்தர்ப்பமும் இடந்தரவில்லை.

இயற்கையின் அழகைக் காட்டி மகிழவைக்க அன்பர் களே இதோ இட்டுச் செல்கிறேன்.

நமது நாடு - இலங்கை நாடு - நலன்கள் யாவும் அருளு நாடு—இந்நாடு

வரைக ளோங்கி வளரும் நாடு
வழிந்து நதிகள் பாயும் நாடு
கரையிற் பச்சை மரங்கள் கூடிக்
கனகப் பூக்கள் சொரியும் நாடு

எங்கும் வாரி சூழ்ந்த நாடு
இணையில் பெருமை ஈட்டும் நாடு
அங்கு மிங்கும் வண்ணச் சோலை
அழகைக் காட்டி அழைக்கும் நாடு

மந்தி பாயும் மரங்கள் மல்கி
வளரும் நல்ல வளங்கள் தன்னில்
தந்தி கூடிப் பிணையுங் கன்றும்
தருக்கி வாழ்ந்து களிக்கும நாடு

இதும்மட்டுமா? இன்னுங் கூறக் கேளுங்கள்.-

இனிய தமிழைப் பேசும் நாடு
இன்பக் கதைகள் உரைக்கும் நாடு
பனியில் தோய்ந்த வரையில் கொண்டல்
படிந்து முழவு கொட்டும் நாடு

இத்தகைய எழில் வாய்ந்த - சிறப்பு வாய்ந்த நமது தாய் நாட்டில் நீ ஒருவன் மாத்திரம் உயர்ந்தவனல்ல. உனக்கு மாத்திரம் இது உரிமையானதல்ல.

யாரும் சமமே இகத்திற் சமமே
ஏதும் பேதம் எம்முள் இல்லை
வாரி சூழும் இலங்கை தன்னில்
வதியும் மக்கள் யாரும் சமமே.

அதோ! இரண்டு எருமைக் கடாக்கள் மூட்டிக்கொள்கின்றன. வானத்தில் முகில்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்வதுபோலல்லவா இவை முட்டிக்கொள்கின்றன.

மஞ்சுகள் மோதி மோதி
வானத்தி லிடித்தல் போல
வெஞ்சினங் கொண்டு மேதி
வீறுட னெதிரும் போது
அஞ்சிய மந்தி தன்னை
அணைத்துயர் கடுவன் சேர்க்கும்
நஞ்சுகொள் நாகம் புக்குப்
புற்றினுள் நடுக்கங் கொள்ளும்.

எருமைக் கடாக்கள் முட்டிக்கொள்வதனால் எழும் சத்தத்தை உண்மையான இடிமுழக்கம் என்று எண்ணியல்லவா நாகம் நடுநடுங்கிப் புற்றினுட் பதுங்கிக் கொள்கின்றது. இன்னோர் விநோதக் காட்சியைப பாருங்கள். மனித வர்க்கமல்ல - மந்திவர்க்கமுமே இக்காட்சியைக்கண்டு குடல்குலுங்க நகைக்கின்றன-

புகைவண்டி கூச்சல் கேட்டுப்
புறத்தினில் நின்ற யானை
திகைகொண்டு வோட லாலே
திடுமென மரங்கள் சாயத்
தொகைகொண்ட சுளைகள் காணும்
பலாப்பழம் சுவைக்கும் மந்தி
நகைகொண்ட கடுவ னோடும்
நக்குநக் குடலம் நோகும்

எனது கண்கண்ட தெய்வம் கூனுடைக் கிழம் இதயத் துடிப்பின் ஓர் பிரதிபலிப்பாகும். இதற்குஇன்னோர் உதாரணம்: ஒரு பசு-வெள்ளைப்பசு - கையால் தொட்டுக் கண்ணிலொற்றக் கூடிய சுந்தரம் வாய்ந்த பசு வீதிவழியே கதறி ஓடுகின்றது. ஜனநடமாட்டம் நிரம்பிய யாழ்நகர் பெரியகடை வீதியினூடு ஓடுகின்றது. யாரோ ஒரு பாவி - படுபாவி - கல்நெஞ்சன கல்லை விட்டெறிந்தோ அல்லது மோட்டாரால் மோதியோ ஒரு கண்ணைப் போழ்ந்துவிட்டான். அந்த இடத்தில் ஒரு பெரிய துவாரம் - துவாரத்தினூடு இரத்தம் பீறிட்டுப் பாய்கின்றது. பசு இரத்தம்வழியக் கதறி ஓடுகின்றது. ஜனங்கள் இக்காட்சியைக் காணச் சகிக்காது தமது புறக் கண்களைப் பொத்திக் கொள்கின்றனர். யானும் எனது புறக் கண்களைப் பொத்திக்கொண்டேன். ஆனால் அகக்கண்ணைப் பொத்த முடியவில்லை. இதயம் துடிப்புக்கொண்டு விட்டது. சொற்கள் ஒன்று கூடின. உடனே அருகாமையிலுள்ள ஒரு கடைக்குள் நுழைந்து இக்காட்சியை வரைந்து கொண்டேன். இவ்வாறு வரைந்த சோகம் படிந்த சொற்சித்திரம் வருமாறு.—

ஐயோவுன் ஆவி சோர
　　அருவிபோல் உதிரம் பீற
மெய்யெலாம் பதறிச் சோர்ந்து
　　விரைவினில் வாட்டங் காட்டக்
கையினல் அணைப்பா ரின்றிக்
　　கதறியேன் ஓடு கின்ருய்
தெய்வமே இந்தக் கோரம்
　　செகத்திலேன் காண வைத்தாய்

இதனைத் தொடர்ந்து இன்னும் நாலு பாடல்கள் "காயப்பட்ட பசு" என்ற தலைப்பில் கவிதைக் கன்னியில் காண்க. இந்நூலிற் துடிதுடிக்கும் 'வேள்விக் கடாவும்' ஓர் சோகச் சித்திரமே.

இனி மேதினிப் பெரியாரில் ஒருவராகிய ஜவஹரை பாரதத்தின் புத்திரனை - இந்தியாவின் முடிசூடா மன்னனை இற்றைக்கு ஏழு வருடங்களுக்கு முன்னர் வரைந்தவாறு- வாழ்த்தியவாறு இன்றும் அவன் ஒளிர்கின்ருன் என்பதை எடுத்துக்காட்டி இப்போதைக்கு அன்பர்கள் -கவிதா ரசிகர் களிடமிருந்து விடைபெற்றுக்கொள்கிறேன்.

மன்னுதி மன்னனென மன்னவரும் உனைவணங்க
மகிதலத்தில் முடிசூடா மன்னவனுய் நீதிகழ்ந்து
பொன்னுறும் உயர்மலையும் புள்ளொலிக்கும் பொழில்பலவும்
பொருந்துமுயர் பாரதத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டி
மின்னுரும் இடைநலியக் கரமுறுத்தும் பெருவிலங்கை
வெட்டியவெம் பெருமானே! வீரமுயர் கேசரியே!
பன்னுளிப் புவிதனில்நீ படிபுரந்து வாழியவே!
பாரத்தின் புத்திரனே பலகாலம் வாழியவே!

நாட்டிலுறு துயர்நீக்கி நலிவுகளை விரைந்தோட்டி
நலங்கமழும் சுதந்திரத்தின் நன்மைகளை நிலைநாட்டி
வாட்டமுறும் இந்தியர்தம் வருத்தமதை மன்னவனுய்
வகுத்திடுநல் நெறிகளினுலொருகணத்திற் புறங்காட்டி
ஏட்டினிலு மியம்பவொணு வின்பமெலாம் நீயூட்டி
இந்திரனு மிப்புவியில் இந்திரனும் வெள்கிடவே
ஆட்சிதனைப் புரிந்திடுவாய் அமரரென யாம்வாழ்வோம்
அண்ணலுயர் ஜவாகர்நீ அருந்தவமே! வாழியவே!

**அனைவர்க்கும் வணக்கம்.**

# நண்பன் உரையாடுகின்ருன்.

"ராஜபாரதி"
குறுமண்வெளி.
24-12-55

பிரிய நண்பருக்கு,

உங்கள் அழகிய நிழலுருவப் படம் விகடன் தீபாவளி மலரில் வந்தமை குறித்து மகிழ்ச்சி. உங்கள் கவிதாசக்தி இமயமளவு வளரவேண்டுமென வாழ்த்திப் பிரார்த்திக்கிறேன். எனது கவிதைகளைப் புகழ்ந்திருந்தீர்கள் ..எனினும் உங்கள் அபார சக்தியின்முன் நான் எம்மாத்திரம்?

கிழக்கு மாகாணத்தில் கவிதை பாடுபவர் மிகவுங் குறைவு. எனினும் ரசிப்பவர்கள்அனேகம். இந்த ரசிகவெள்ளத்தில் முன்னேடிக்கொண்டிருக்கும் 'புலவர்மணி' - 'புரட்சிக்கவி கமால்' - 'நீலவாணன்'-'யுவன்'-'பரிமளா' முதலியோரில் நானும் ஒருவன் என்பதைச் சற்றுத் தற்புகழ்ச்சியோடு- ஆனுல் அடக்கத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மட்டக்களப்புக்கு விஜயஞ் செய்தபோது அவரைச் சந்தித்து மணித்தியாலக் கணக்கில் கவிதை உரையாடல் செய்தேன். பேச்சுவாக்கில் 'ஈழத்தில் சிறந்த தரமான கவிஞர்கள் யார்?' என்று கேட்டதற்கு 'இனிமேற்ருன் பிறக்கவேண்டும்' என்று சொன்னுர். ஆனுல் இவருடைய அந்த அபிப்பிராயம் ஒரு சில மணித்தியாலங்களில் மாறுபட்டுவிட்டது. காரணம் உங்கள் 'கவிதைக் கன்னி' எனது 'விவரண காவியம்' துணைவியார் பரிமளாவின் வேகமும் துடிப்புமிறைந்த அபூர்வபாடல்கள் சிலவற்றை அவர் பார்வையிட நேர்ந்தது.

உங்கள் தங்கை பரிமளா அண்ணுவோடு மிகவும் கோபமாகஇருக்கிரு. காரணம் கவிதை நூற்பிரசுரத்தை அண்ணு காலவரையின்றித் தாமதஞ் செய்வதும் அதில் எதிர்பார்த்த

அளவுக்குத்தீவிர அக்கறை காட்டவில்லையுமென்பதுமே. அண்ணு அவளுடைய கடைசி அஞ்சலுக்கு இதுவரை பதிலும தரவில்லையாம்.

...இதற்கெல்லாம் அவளைச் சமாதானப் படுத்தவேண்டியது உங்கள் முக்கிய கடமையாகும். நானும் சேயும் துணைவியார் அன்பணைப்பிற் க்ஷேமம். தாங்களும் சகோதரியும மருமக்களோடும் சுகஜீவிதம் புரியப் பராசக்தி துணைபாலிக்கட்டும்.

மிக்க கனிவுடையவன்
**வி. கி. இராசதுரை**
'ராஜபாரதி.'

# அண்ணுவின் உபகரிப்புகள்

கலாபவனம
26-12-55

**என் பிரிய தங்காய்!**

கடந்த பலவாரங்களாக நிரம்பிய ஜோலிகள்-நூலாக்கம - அச்சகத்தில் ஓயாத உழைப்பு - பாடசாலைப் பணிகள்- இன்னவற்றிற் கிடையே கொழும்பு செல்ல நேர்ந்தமை- எனவே பதிலெழுதத் தாமதம். அண்ணு அருமைத் தங்கையை அடியோடு மறந்துவிட்டானே என்ற எண்ணமும் உமதுள்ளத்தில் தோற்றியிருத்தல் கூடும். ஆனுல்எத்தனை ஜோலிகள் - எத்தனை கவலைகட்கிடையிலும், அண்ணு மறக்காத - அவனுள்ளத் தகலாத உயிரனையார் இரண்டொருத்தருண்டு. அவர்களுள் நீரும் ஒருத்தியல்லவா?

நிற்க, இம்முறையும் கொழும்புசென்று திரும்பும்போது உம்மை - மருகி ராஜினியை நினைந்தேன். எனவே நும் பொருட்டு வாங்கிவந்த சில பொருட்கள் - அண்ணுவின் உபகரிப்புகள் இத்துடன் இன்று அனுப்புகிறேன். அன்புடன் அவற்றை ஏற்குக. மிகுதி விரைவில்

அன்புமிக்க
**அண்ணு.**

# தங்கையின் போதனைகள்

குறுமண்வெளி.
28-12-55

என் அண்ணு,

தங்கள் தங்கக் கரத்திஞல் தங்கைக்கு வழங்கிய உபகாரங்கட்கு மிக மனப் போராட்டத்தோடு நன்றி கூறுகின்றேன். என் அண்ணு பகற்கண் இராக்கண் முழித்துப் படாதபாடுபட்டுக் கை உழையும் வண்ணம் கலைத்தொண்டு புரிந்து சம்பாதித்த பொருளை எவ்வித பிரதிபலனும் செய்ய முடியாத நான் எவ்விதம் ஏற்பது என்பதை நினைக்கவே மனம்பதறுகின்றது. ஏன் அண்ணு வீணுக எனக்குஇத்தனை உபகாரங்களைச் செய்கின்றீர்கள்? அவற்றிற்கெல்லாம் பதில் உபகாரஞ் செய்யமுடியாமல் உங்கள் தங்கையின் உள்ளம அனுபவிக்கும் உயிர்த் துடிப்பின்வேதனை உங்கட்குவிளங்குமாயின் என்னை இத் தருமசங்கடமான நிலைக்கு ஆட்படுத்தமாட்டீர்கள். உங்கள் கனிந்த பரிசுத்தமான இதயவாயிலின் வாசற்படியில் தலைவைத்து வணங்கிக் கேட்பது - அண்ணு! உங்கள் உடல் நிலையைக் கவனமாகப் பேணிக்கொள்ளுங்கள். அளவாக உழையுங்கள். அளந்து செலவிடுங்கள். அண்ணியின் மனம் நோவ நடவாதீர்கள். ஈசன் அருளிய உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காகக் காசு பணம் தேடுங்கள். சத்துள்ள உண்டிகளை அருந்திச் சாத்தியப்படுமளவிற்கு ஓய்வெடுத்து வித்திலே உற்பத்தியான உங்கள் கவிதாசக்தியை விருத்திசெய்து இடுக்கண் கண்டு சிரித்து இன்ஞ செய்தார்க்கும் நன்மையே செய்து இறைவழிபாட்டில் அணுவளவும் தவருது வாழவேண்டுமென வேண்டுதல் செய்யும்

உங்கள் தங்கை
ஜீவா.

# வங்கமும் வற்றுதலுண்டோ?

கலாபவனம்
30-12-55

**என் அரிய தங்காய்!**

உமது முதற் கடிதம் - அண்ணாவின் செயல்களை அலைபோடு கண்டிக்கும் கடிதம் - உமது பண்புக்கேற்ப நீர் வரைந்தது முற்றிலும் சரி. எவ்வளவோ காத தூரங்களுக்கப்பால் இருந்துகொண்டு அண்ணாவை நன்குகாண்கின்றீர். மணிமணியாக அண்ணா கையாளவேண்டிய வழிகளை வகுக்கின்றீர். அனைத்திற்கும் நான் தலைவணங்க வேண்டியவளே. ஆனால் இவற்றிற்கெல்லாம் சிறிது புறம்பே விலகி அண்ணா நடக்கும் - கைக்கொள்ளும் செயல்களுக்கும் சமாதானங் கூறுவதும் இச் சந்தர்ப்பத்திலேற்றது - தங்கை அண்ணாவை இன்னும் நன்கு புரிந்துகொள்வதற்காக. எனவே இதோ,

அண்ணனொரு பைத்தியமோ அன்றி மற்றோர்
அறியாத பிரகிருதி யென்று தானே
எண்ணமது நடுக்கமுற இதயம் நோவ
எழிற்கரங்கள் பதறவுநீ எழுது மோலை
உண்மையினி லுளம்பாய உறுத்தல் செய்ய
உன்பண்புக் கவன்சிரத்தை உன்ருள் வைத்தே
கண்ணதனி லொற்றியுமுன் பொறுமை வேண்டிக்
கருத்தினிலிங் கூறுவதை அவனுஞ் செப்பும்

தங்கையரின் அன்புபோற் பெருக்கம் கொள்ளும்
தாரமதும் தமர்பிறரும் மகிழ்வு காணப்
பொங்குமவன் பெருநிதியம் துய்த்தல் கொள்வர்
பொருள்சிறிது நும்மவரும்பகிர்ந்து கொண்டால்
வங்கமெனும் சமுத்திரந்தான் வற்றிப் போமோ?
வயங்குபொருள் மகிழ்வனைத்தும் நுமது மன்றோ
பங்கயமென் கரங்களதை யேற்றல் வேண்டும்
பாலமுதம் அவனூட்ட உண்ணல் வேண்டும்.

இத்தகைய செயல்களவன் உயிரின் நாடி
இன்றுலகி லவன்காணும் மகிழ்வு மாகும்
எத்தனையோ இடிமுழக்கம் முன்னும் கேட்டான்
இன்றுனது சொற்களிலோர் புதுமை கானேன்
வித்தகியுன் பண்பினைத்தான் பணயம் வைத்தே
வீணிலொரு டாம்பீகம் கொண்டா னல்லன்
உத்தமியுன் மனம்நோகி லவனும் நோகும்
உயிர்த்துடிப்பி னவன்துடிப்பு மதுவே யாகும்

அன்புள்ளந் தூண்டஅவன் கரங்க ளீயும்
அருங்கொடையை மறுக்கும்போ தவன்முன் காணும்
துன்பமதைத் துடைப்பதற்கு நீயிங் கில்லை
துடிக்குமுன துளந்தேற்ற நானங் கில்லை
என்புருக என்துணைவி மக்கள் நம்மின்
இன்பமுன தின்பமெனும் பண்பு கொண்டாய்
உன்பதங்கள் தனையேத்தி யுறுதி கூறும்
உன்மனமும் நோகஅவன செயல்கள் கொள்ளான்.

நின்துணைவன் என்னன்பன் நெறியிற் சேர்ந்த
நீயெனது பெறற்கரிய தங்கை! தெய்வம்!
பொன்வளைகள் குலுக்குமுயர் ராஜினி தானும்
புதியதொரு மருகியென வளர்ந்தா ளேற்கும்
என்மனைவி மக்கள்தம ரெல்லா ரோடும்
இறையருளும் என்குலமும் பெருகக் கண்டேன்
பொன்னொளிர மகிழ்வொளிரப் புதுமை பூப்பப்
புத்தொளியில் அண்ணனுடன் பொருந்தி வாழ்வீர்.

முல்லைக்காடு வளர்ந்து வருகின்றது. சீக்கிரம் பூத்துக் குலுங்குவதை நீவீர் பார்த்து மகிழலாம்.

உமது அண்ணா
யாழ்ப்பாணன்.

## புதுவருட வாழ்த்துக்கள்.

நங்கைநீ நீடு வாழி
　　நலமிகும் ஆண்டு தன்னில்
பொங்கிய மகிழ்வி னோடும்
　　புதுப்புதுக் கவிதை யோடும்
செங்கரம் நீட்டிச் சேரும்
　　சிறுமியாள் ரஜினி யோடும்
சங்கின மூரும் நாடன்
　　செல்வனும் தழைக்க வாழி!

அண்ணா
1-1-56. யாழ்ப்பாணன்.

# குயில் கூவி அழைக்கின்றது


குறுமணவெளி,
3-1-56

வாஞ்சையோ டனுப்பி வைத்த
வாழ்த்துக்கள் கொண்டே னுங்கள்
தீஞ்சுவைத் தமிழில் தோய்ந்த
தித்திப்பைக் கண்டேன் நெஞ்சால்
ஆய்ந்தவை யோடு சொக்கி
ஆடினேன் அண்ணா! எங்கள்
பூஞ்சுனை வளைந்த சிற்றூர்
பொலிவுற எழுந்து வாரீர்!

சித்திரை வரட்டும் என்னூர்
சிரிக்கட்டும் வசந்தக் காற்றில்
நித்திரை விரட்டும் இன்பம்
நிறைந்திடும் கவிகள் சொல்வேன்
எத்தனை இன்பந் தந்தாய்
உத்தமத் தங்கா யென்றே
புத்துணர் வோடு நீங்கள்
புகலுவீ ரன்றே இன்பம்

கொள்ளையாய்த் துய்க்க நீங்கள்
குடும்பத்தோ டிங்கு வந்தால்
அள்ளியே அமுத மூட்டி
அரட்டையாற் சோர்வு ஓட்டிக்
கள்ளினை மயக்க மூட்டும்
கவிகளின் திறமை காட்டி
நள்ளிரா வரையும் பேசி
நாம்மகிழ்ந் திடலாம் வாரீர்!

பட்டின மேகி ஆங்கோர்
படகிலே யேறித் தங்க
மெட்டிகள் பாடல் போன்ற
மீன்களின் இசையைக் கேட்டுச்



★

பரந்த கடலழகில் பற்றியுளம் பாயுதடி
விரிந்த வயலழகில் விழைந்ததென்னுளம் வீழுதடி
சரிந்த மலைகளிலே தாவியுளம் சாருதடி
சரந்த வாழ்வதனைக் கட்டறுத்தும் ஓடுதடி

(பக்கம் 92

சொட்டிடும் பனியிற் றோய்ந்து
சுவாமிஜீ 'யாழ்நூல்' ஆய்ந்தே
எட்டுணை அயர்வு மின்றி
இன்புற அண்ணா வாரீர்!

யாங்களும் வருவோ மந்த
யாழ்நகர் அழகு துய்க்க
மாங்கனிக் கன்னங் கொண்ட
மருகியைக் கொஞ்ச உங்கள்
பாங்கிலே அமர்ந்து யாமும்
பழந்தமிழ் விருந்து தின்ன
ஆங்குதான் சொர்க்கங் காண்போம்
அண்ணனின் இலத்திற் றானே

செந்தமிழ் கொல்லுந் தீய
... ... ... ... பேய்கள் கூட்டம்
வந்துறைந் தெங்கள் நாட்டு
வளமெலாஞ் சுரண்டு கின்ற
கந்தமுள் மலர்கள் பூத்த
கல்லோயாப் பள்ளத் தாக்கை
முந்திநாம் பார்க்க வேண்டும்
முத்தமிழ் அண்ணா வாரீர்!

**என் அருமை அண்ணா!**

புத்தாண்டில் உங்கள் பொருளாதாரம் பெருகி
முத்தாய் முறுவலிக்கும் முளையொன்று தான்பெற்று
'அத்தான்' எனஅன்போ டழைக்குமென் அண்ணிதரும்
சத்தான உண்டியிலே சடலந் திரண்டுருண்டு
செத்தாலும் போராடிச் செந்தமிழை இந்நாட்டு
ஒத்தாளுங் கூட்டாட்சி உயர்மன்றத் தேபுகுத்த
எத்தாலுந் தொண்டாற்ற என்னண்ணா! முன்வாரீர்!

அண்ணிக்கும் மருமக்களுக்கும் என் அன்புகூறுங்கள்

மிக்க அன்புடைய தங்கை
**பரிமளா—ரா.**

# யாழ் ஒலிக்க மறுக்கின்றது

கலாபவனம்
6-1-56

**என் அருமைத் தங்காய்!**

அன்பூற அழகூற அமுத மூற
அருந்தமிழின் சுவையதுவும் சேர்ந்தே யூற
நன்பாவில் தேன்கண்டேன்! நளினங் கண்டேன்!
நற்கனிகள்சுவைகுலுங்கிக்கொட்டக்கண்டேன்!
என்பாவி லொன்றுமில்லை இதய மில்லை
எதிர்நோக்கும் அன்பதுவும் எள்ளு மில்லை
பொன்பாக்கள் ஒருகோடி பாடும் பாவாய்!
புவியதனில் ஏமாற்றும் உருவே கொண்டேன்

தேன்சொட்டச் சுவைசொட்டத் திருவுஞ் சொட்டத்
தித்திக்குந் தீந்தமிழுஞ் சேர்ந்து சொட்ட
வான்சொட்டும் அமிழ்தூறும் வடிவ வாயால்.
வையத்திங் கெனையண்ணா வென்றே கூறும்
மான்குட்டி தாயினொடும் மருண்டே துள்ளும்
மண்டூரின் மருங்கினிலே வளரும் பாவாய்!
ஏனெட்டி யெனைப்பிடித்தாய்? என்ன கண்டாய்?
ஏமாற்றும் வித்தையினை என்னிற் காண்பாய்

படகினில்நா னமரமாட்டேன் பாவாய் கண்ணே!
பைங்கிளிகள் கொஞ்சுமொழி பருக மாட்டேன்
மடவன்னம் மகிழ்ந்தூரும் தடங்கள் தோறும்
மாறிவருமியற்கையெழில் மனதிற் கொள்ளேன்
குடதிசையி னெதிர்த்திசையிற் குமுத வாயாற்
குயிலினங்கள் குதூகலிக்கக் கூவும் பாவாய்!
வடவரையா மிமயமென வளரும் பாரம்
மனதினிலே மிகவுண்டு மகிழ்விங் கேது?

நீயெனது வூரினுக்கு வருதற் போதும்
நேரிழையே! நினதெழிலார் வருகை தன்னை
நானதுதான் மதிக்காது நடந்து விட்டால்
நலிவுடனீ வாடாதே நானென் செய்வேன்?
ஏனதுதா னிவ்வாறென் னண்ணா செய்தாய்
என்றுமிக வருத்தமுடன் நீயே கேட்டால்
போனதுவும் வருவதுவும் புரியச் சொல்வேன்
பொன்னடியைத் தொட்டுமிகப் பொறுமை கேட்பேன

அண்ணாவின் வன்மனமோ யாதோ வென்றே
அவனிதனில் வாடாமல் அணங்கே நீதான்
உண்ணாம லுறங்காம லுனது காலம்
உருவழிந்து போகாம லுண்மை கூறும்
எண்ணாம லெதுவெதுவோ எழுதி விட்டேன்
இதனைநினைந் திருகண்ணீர் சொரிதல் வேண்டாம்
கண்ணான இருகண்ணில் ஒன்று நீயே!
காசினியிற் கவியருளும் தெய்வம் நீயே!

உண்மையெலா முனக்குரைத்தேன் ஒழிப்பு வேண்டேல்
ஒண்டொடியே ஊழியுள காலமட்டும்
எண்ணமதி லுனைமறத்த லில்லைக் கண்டாய்
இந்தவுயர் பேறுதனை நீயும் பெற்றாய்
வண்ணமதி வடிவுடையாய்! வரிகள் தன்னில்
வழிந்தூறு மமிழ்தமது சொட்டச் சொட்ட
அண்ணனையுன் அருந்தமிழால் மயக்கி வைத்தாய்
அவனையொரு பைத்தியமு மாக்கி விட்டாய்.


**குறிப்பு:**

காரினிலே யாழ்நகர்க்குப் போகும் போது
கவினுருவே! இக்கவிகள் வரைந்து கொண்டேன்
ஏரினிலே பாட்டுரும் எழிலார் நாட்டில்
இன்புறவே வளருமென தரிய தங்காய்!

ஆருனைப்போ லன்புருக அண்ணா வென்றே
அழைப்பவரை அகிலமதி லெங்குங் காணேன்
பாருளதோர் வரையுமுன தன்பும் வாழி!
பைந்தமிழே! பசுங்கிளியே! பாவாய்! வாழி!

உமது

அண்ணா



# உளத் துடிப்பு.

கலாபவனம்,
7- 1- 56

என் தங்காய்!

கண்ணிணை மூடி யானும்
கனகபஞ் சணையின் மீது
எண்ணம்வே றெதுவு மின்றி
இருகணந் துயில்வோ மென்றால்
அண்ணன்யா னுனக்கு நேற்று
மனுப்பிய வோலை தன்னால்
வண்மைசே ருன்ற னுள்ளம்
வருந்திற்றோ வாடிற் றென்றே

மனதினை வாட்ட யானும்
வன்மன மிடிந்து நோவ
நினைவினி லுன்றன் சாயல்
நிறைந்துமென் கண்ணி லாட
அனைவரும் துயிலும் நேரம்
யானது கொள்ளே னாகி
உனைநினைந் துருகி யிந்த
வேளையி லுறுதி கூறும்

கண்மணி வாட்டங் கொள்ளேல்
கயவனு மென்போ லன்றி
உண்மையி லுன்னி லன்பு
கொண்டவ ரனேக ருண்டு
பண்ணிசைப் பாடல் கேட்பர்
பரிந்துனை யேத்தல் செய்வர்
தண்மதி நிலவு போலத்
தயையினைச் சொரிந்து நிற்பர்

என்மனை யொருத்தி யாவள்
என்தங்கை இன்னோர் செல்வம்
அன்னையி னன்பு தோற்க
அணைப்பவ ரனேகர் தாமும்
உன்னது வருகைப் போதிங்
குளம்மகிழ்ந் துறவு கொள்வர்
இன்னபே ரெல்லோர் தம்மின்
அன்பினி லின்பங் காண்பாய்

பதியினோ டிங்கு வாவா
பரிமளா ஜீவா வாவா
அதிசய மொன்றுங் காண்பாய்
அண்ணனின் வரண்ட வுள்ளம்
மதியெழப் பொங்கு மாழி
போலது மகிழ்ச்சி கொண்டே
கதியினிற் களிப்புக் கொள்ளும்
கவினுறு தோற்றங் காட்டும்.

உமது
அண்ணா



# நெடுமலர்க்கரம் என்செய்யும்?

கலாபவனம்
8–2–56

அன்னையுன் அஞ்சல் காணு
தவனியிற் சோர்ந்தே வாடித்
தன்னது தாயைத் தேடும்
கன்றெனத் தளர்ந்தே யுள்ளம்
இன்னவை வெறுக்கும் - ஏனோ
ஏந்திழை இந்த வஞ்சம்
முன்னென தஞ்சல் தன்னால்
மௌனமே முடிபு தானோ?

மூன்றிரா விழிப்புக் கொண்டேன்
முற்றுந்தா னொன்றுங் காணேன்
ஊன்றிநீ யிதனை யோர்ந்தே
யுன்மனம் நெகிழ்தல் வேண்டும்
ஆன்றபே ரறிஞ னல்லன்
அவனியிற் சித்த னல்லன்
கான்றுமென் கனலிற் கண்கள்
நோவதும் கருதாய் தானோ?

ஓர்பக்கம் மனப்போ ராட்டம்
ஓர்பக்கம் நிறைந்த பாசம்
ஈர்பக்கம் என்னை வாட்ட
எண்ணமும் செயலு மற்றே
ஆர்பக்கம் சாயு மென்ப
தறிகிலான் அண்ணு தானும்
வேர்பக்கம் சாய்ந்து விட்டால்
விழுவதும் மரமா மன்றோ?

நிறுதிட்டம் வேண்டி நின்றேன்
நேரிழை வஞ்ச மொன்றும்
உறுதிட்டம் போட்டே னல்லன்
உன்னையும் மறந்தே னல்லன்
மறுதிட்டம் போட்டோ கொண்டாய்?
வாடுமுன் அண்ணா தன்னும்
வெறுதிட்டம் போடல் நன்றோ?
வீணிலே யிந்த வஞ்சம்?

உன்னருங் கவிதை யஞ்சல்
உளத்தினி லமுத மூற்றும்
என்னயான் முன்னர்க் கூறும்
வாசகம் ஏமாற் றென்றோ
மென்மனம் தன்னிற் கொண்டாய்
வித்தகி என்றன் அஞ்சல்
கன்மன மாக்கி யுன்றன்
கைகளைத் தடுத்த துண்டோ?

அண்ணனே வஞ்ச மில்லான்
அவனுளம் வெள்ளை யுள்ளம்
பண்ணினேர் மொழியா யிந்தப்
பான்மையை யறிந்த நீயும்
கண்ணினிற் கண்ணீ ரோடக்
கானத்தி னுறையப் பாயத்
தண்ணளி மனத்தா யென்னைத்
தவிக்கவும் விடுதல் நன்றோ?

நாளையுன் அண்ணா தன்னின்
நலமிகு பண்பைக் கண்டால்
தாளினிற் தலையை வைத்துத்
தயையினை வேண்டி நின்றால்

வாளைபாய் தடங்கள் தோறும்
　　பங்கயம் மலர்ந்து காட்டும்
நீள்வயற் செல்வி! உன்றன்
　　நெடுமலர்க் கரமென் செய்யும்?

வன்மனம் விடுத்தல் வேண்டும்
　　வஞ்சியே வடிவா யஞ்சல்
முன்னவே போல நீதான்
　　முறுவலித் தெழுதல் வேண்டும்
என்மனம் கொள்ளை கொண்டாய்
　　இக்குற்ற முனதா மன்றோ
பின்னையே னென்னை நோவாய்
　　பெரும்பிழை யெல்லா மேற்பாய்.



# என் உயிர் அண்ணா!

குறுமண்வெளி
8–2–56

கன்னித் தமிழ்க்காவிற் கவிஞர் சொற்பூக்கள்
உன்னிப் பிடித்தாய்ந்தே உணர்வுப் பிணைநாரிற்
பின்னித் தார்செய்து பிரியத் துடனீண்டு
வண்ணத் திருமுகமாய் வழங்கும் பொற்கைக்கு

எம்மாறு செய்வேன் ...? ஏழைக்கு நெஞ்சமலர்க்
கைம்மாறு ஒன்றன்றிக் காசுபண மேதண்ணா...?
'அம்மா, என் ஆருயிரே, அழகே!' எனவிளிக்கும்
செம்மாந்த **பண்பிற்குச்** செந்தமிழும் ஈடாமோ?

ஆசையோடு ராஜினிக்கு அம்மா னுவந்தளித்த
பாசப் பரிசிலுக்குப் பதிலாகச் செம்மழலை
பேசிக் களிப்பூட்டும் பிஞ்சதரப் பொற்சிமிழால்
தேஜ(ஸ்)உறுவாண்முகத்தில்தெளிக்கின்றாள்முத்தமலர்

அன்புத் துணைவர்க்கோ ரன்பளிப்பா யண்ணாவின்
பொன்புதை யலன்ன புத்தகங்கள் ஈந்தவுடன்
முன்பெவரும்சாதிக்காமுயற்சியிலேஆழ்ந்தெடுத்த
ஒண்தவள மீதென்றார் ஒப்பில்லா ஏடென்றார்

பூகோளந் தன்னைப் புந்தியெனு மோரடியால்
ஆகான பாகான ஆற்றலுறு யாழ்ப்பாணன்
வேகமுட னேயளந்த வெற்றிப் படைப்பென்றார்
தாகமுறுமாணவர்க்குத்தண்ணீர்ச் சுனையென்றார்

நுண்மாண் நுழைபுல்த்து நுடங்கூஞ்ச லாடுகின்ற
பொன்னுங்கதிர்களெனப்பொலிந்தென்புலனுக்கு
விண்ணூர் மதியாகும் விளக்காக வித்தகனும்
அண்ணா சிவக்கொழுந்தன் அளித்தாரோர் நூலென்றார்


நன்றி யொருகோடி நானவர்க்குக் கூறுவதாய்த்
துன்றுசுவைப பாவியற்றித் துணையாளே கூறென்றூர்
ஒன்றியென தன்புருவாய் என்னகத்திலன்றுமுதல்
நின்று விளையாடும் நிறைகுடமே! நீவாழி!

### வாழ்த்து

ஆக்கங்கள் வாழி! அச்சகத்தின் மேனாள்
நோக்கங்கள் வாழி! நூலிடையார் முன்தந்த
ஏக்கங்கள் மாறி என்னண்ணு! பல்லாண்டு
பூக்கும்தமிழ்-ஆல்போற்பொலிவுற்றுவாழியவே!

தங்கை—பரிமளா.

(ஜீவா)



# சக்தி! எல்லா மீவாய்!

கலாபவனம்
15-2-56

**என் பிரிய தங்காய்!**

உள்ளம் கொள்ளையுற உண்ண முடியாமற்
தெள்ளு தமிழ்க்கவிதை திரண்டுவரும் பேரன்பு
அள்ளிச் சொரியுமெம தாரணங்கே! அன்புருவே!
கள்ளியெம துள்ளத்தைக் கவரவரு காரிகையே!

தின்னத் தமிழ்போலத் தித்திக்குந் தீஞ்சுவைசேர்
வண்ணத் திருக்கையால் வரைந்தவுயர் பாமாலை
முன்னைத் தவந்தானே? மோதுமுயர் பேரன்போ?
என்னைத் திருப்பிவிடும் எந்திரமோ? பேர்வலியோ?

நீயெழுத அவனெழுத நீவி ரிருவீரும்
கூவுமுயர் குரலொலிகள் குக்குலத்தின குதூகலிப்போ?
ஓய்வுபெற வெண்ணுமென துள்ளத்தை ஈர்ப்பதற்கு
ஆய்வுடனே நீரமைத்த அருங்காந்தப்பொறியதுவோ?

தாயெனவே அன்புடையீர்! தமரெனவே பெருந்தகையீர்!
தேயுமென துள்ளத்தைத் திருத்திவிடும் திறனுடையீர்!
வாயதனில் அமிழ்தூற மனமதனில் அன்பூற
நேயமுடன் நீர்விடுக்கும் நெடுவஞ்சல் தொடருகவே.

**மங்களம்.**

நீவாழி! நின்குலந்தான் நீடு வாழி!
நெற்பயிர்கள் கழனிகளிற் செழித்தல் போல
நாவாழி! நல்லவுயர் கவிதை வாழி!
நன்மாரி பெய்யுமுயர் காரே போல
பாவாழி! பண்ணிசைக்கும் பால்வாய் வாழி!
பழந்தமிழி னிசைபோலப் பல்லாண் டிங்கே
ஏவாழி! ஓம்சக்தி எல்லா மீவாய்!
எனதன்பே! எனதுயிரே! என்றும் வாழி!

உனது அண்ணு
**யாழ்ப்பாணன்.**

**கவிதை அஞ்சல்கள் முற்றும்.**

★

# கவிதைப் புனல்

○

வண்டினங்கள் இன்சுருதி மகிழ்வுதரும் பாடலடி
கொண்டலசை குமுறல்களே கொட்டுமுயர் முழவமடி
அண்டர்களும் வியப்புறவே அருந்தமிழைச் சுவைத்திடுவோம்
எண்டிசைக்கும் இன்பெருக்கி இன்கவிகள் இசைத்திடுவோம்

-யாழ்ப்பாணன்

கண்ணகியின் கால்வாரிப் பிறந்த நாங்கள்
காற்சதங்கை பண்ணொலிக்கக் கைகள் பூண்ட
வண்ணவளை தாளமிட வாசம் வீசும்
வாயிதழ்கள் தமிழ்பேச வாழ்ந்தோம் - எம்மை
எண்ணவில்லை ஏற்கவில்லை - எந்த ஆணும்
ஏறெடுத்துப் பார்க்கவில்லைச் சப்பாத்தோடு
மண்ணதிர நடைபோடும் மாதைக் கண்டு
மருண்டாரெம் பண்பையெலாம் மறந்தான் காணீர்.

—ஜீவா

# தேவி துதி

யாழ்ப்பாணன்

உள்ளத் துறைந்து பெருக்கெடுக்கும்
உணர்தற் கரிய ஒளிப்பிழம்பே!
தெள்ளத் தெளிந்த தமிழ்வாணர்
தினமுந் திளைக்குங் கலைக்கடலே!
வெள்ளைக் கமலம் வீற்றிருக்கும்
விரைசேர் பதத்தாய் பெருமாட்டி!
அள்ளிப் பொழிவாய் அருட்பொழிவே
அகிலம் அளிக்கும் ஆரணங்கே!

கலைகள் திரண்டு கசிந்துருகிக்
கமழ்நான் மறையுங் கடிதொன்றி
அலைகள் புரண்டு கரைபடியும்
ஆழி முகட்டில் அழகொழுக
உலகை மயக்கும் வெண்மதியே!
ஒளிசேர் கிரணம் மிகவுடையாய்!
மலைகள் போலக் கலைகுவிக்கும்
மனத்தார் மனத்துள் நிறைந்தவளே!

வேண்டும் விழையும் பொழுதெல்லாம்
விரும்பும் வரங்கள் விதித்தருளி
யாண்டும் என்றும் என்னுளத்தே
யானாய் நீயாய்ப் பிறிதன்றி
ஆண்டுன் அருளைப் பொழிந்திடுவாய்
அடியேன் துறத்தல் பொருந்தாதே
மாண்டென் உடல்விட் டகலுயிரும்
மலர்தாள் தன்னில் ஒன்றாகவே.

நீயென் னுடலம் உயிரானாய்
　　நினைவும் நனவும் நீயானாய்
ஆயும் கலைகள் நீயானாய்
　　அரும்பொன் மணியும் நீயானாய்
தாயும் சேயும் நீயானாய்
　　தமரும் பிறரும் நீயானாய்
ஓய்வும் உழைப்பும் நீயானாய்
　　ஒடுக்கம் உன்றன் ஒன்றாகவே.

பொய்யும் புரட்டும் புறங்காட்டப்
　　புதுமை வெள்ளம் பொங்கிவர
ஐயந் திரிபு மென்றிவைகள்
　　அவனி தனைவிட் டகன்றுவிடச்
செய்ய வாயாற் றிகழ்மறைகள்
　　செகத்திற் செப்பும் பெருமாட்டி
நொய்யு மிடையாய் நுண்பொருளே
　　நுன்றன் பாதம் நூன்முடியே.

கையில் வீணை தனையேந்திக்
　　கமலத் தமர்ந்து மறைதாங்கி
மெய்யில் படிக நிறமுடனே
　　விளங்கும் பவளச் செவ்வாயும்
வையம் புரக்கும் நகைமுகமும்
　　வாழ்வு வகுக்குஞ் செயல்களுமாய்
உய்யும் வகையை விதித்தருள்வாய்
　　உமையே! வாணி! பராசக்தி!

# சக்தியின் இருப்பிடம்

யாழ்ப்பாணன்

பெண்ணுயர் வதனந் தன்னில்
    பிரமனின் நாவு தன்னில்
எண்ணினி லடங்கா இன்பம்
    ஏந்திய மழலை தன்னில்
கண்ணிய மக்கள் காட்டும்
    கருணைசே ரிதயந் தன்னில்
பண்ணிறை பாட லோதும்
    பக்தரின் குழாங்கள் தன்னில்

வீணையின் நரம்பி னோடும்
    மேவிடும் விரல்கள் தன்னில்
பாணியின் சேர்க்கை யோடும்
    பாடுவார் பதங்கள் தன்னில்
ஆணையின் மீறு வீரர்
    அமரொளிர் புயங்கள் தன்னில்
தூணிறை சிற்பங் கொத்தும்
    சுத்தநல் வித்தை தன்னில்

கவிஞனின் கனவு தன்னில்
    கற்பனை யுள்ளந் தன்னில்
புவியினிற் பொருந்தக் காட்டும்
    பொருளுறை பாடல் தன்னில்
அவனியி லறிஞர் கூறும்
    அரும்பத வுரைகள் தன்னில்
நவரசஞ் சொட்ட நன்கு
    நடிப்பவன் நடனந் தன்னில்

அழகினைச் சொட்டும் பூக்கள்
ஆடியே திரியும் மஞ்ஞை
எழிலுறு திங்கள் வானம்
எழுந்திடும் பரிதிச் சோதி
மழைமுகிற் படியுங் குன்றம்
மாநில நதிக ளெங்கும்
விழைவுறு சக்தி யன்னை
வீற்றிருந் தரசு செய்வாள்.



# எம் தமிழ்

ராஜபாரதி

சங்க கால மேதைகள்
சலித் திடா உழைப்பினல்
தங்க மான எம்தமிழ்
தாயை ஏற்றிப் பாடுவோம்

வீறு கொண்ட மாகடல்
வெள்ள முண்ட போதிலும்
ஊறுகண் டமிழ்ந் திடா
உயர்வை எண்ணிப் பாடுவோம்

சுற்றி வந்த அந்நியர்
சூழ்ச்சி செய்த போதிலும்
அற்றெ ழிந்து போயிடா
ஆக்க மேற்றிப் பாடுவோம்

கடல் கடந்து போயினும்
'கள்ளத் தோணி' ஆயினும்
மடல் பிறந்த தாழைபோல்
மணம் பரப்பல் பாடுவோம்

எண்ணி லாத ஆண்டுகள்
இடைய றாது வாழ்ந்துமோர்
'கன்னி' யென்ன நெஞ்சினைக்
கவர்த லெண்ணிப் பாடுவோம்

கமப னோடு வள்ளுவன்
கவிதை யாரஞ் சூட்டவே
அம்பு விக்கு ளழகியாய்
ஆன தன்மை பாடுவோம்

# கவிதைப் பாசம்

ஜீவா

பொன்பூக்கள் சொரிந்தொளிரும் பூங்கா வொன்றில்
புள்ளினங்க ளிசைபாடப் புதுமை பூப்ப
வெண்பாக்கள் நொடிக்குள்ளே யாத்துப் பாடும்
வித்தையிலே சாதுர்யம் பெற்ற பாணன்
பண்பார்க்கும் தமிழ்பாடக் கேட்டேன்; ஆகா!
பருவத்தால் விம்மியெழும் பெண்மை நெஞ்சு
தன்பாட்டிற் பறந்தோடிச் சதங்கை கட்டித்
தாளத்திற் கமைவாக ஆடிற் றம்மா......

இசைவந்த திசைநின்றே இலங்கு நாட்டம்
என்நோக்கில் மோதிற்று – இளமை வேட்கும்
பசிதந்த தப்பார்வை – பாச ஆன்மா
பாய்ந்தோடி ஒன்றிற்று – பரிதி கண்டே
அசைகின்ற கமலத்தை - அனுராகத்தேன்
அழைக்கின்ற களிவண்டை - அகிலத் தெட்டுத்
திசைகொண்ட வன்னத்தை - ரசிக்க வில்லை
தேனூர்க்குந் தமிழ்கேட்டு லயித்து விட்டேன்

கவிபாடி வெறிதந்த காளை மார்பிற்
கண்மூடிக் கிடந்தேனிக் ககன பூதம்
புவியோடு படிகின்ற அடிவானத்தே
பொலிகின்ற தீவொன்றில் – அங்கே மாரன்
ரதியோடு பூப்பந்து மாற்றி யாடி
ராகத்தே னொழுகின்ற தமிழிற் பாடி
அவியாத அனுராகங் கூட்டல் கண்டேன்
அடியாளுங் கவிமீது பாசங் கொண்டேன்.

# உள்ளமிசைக்குது காவியம்


ராஜபாரதி

முத்தொளி வீசும் முறுவலை — உயர்
முத்தமிழ் பேசும் இதழ்களை — நிறை
சித்திரை மாதத்துப் பூரணை — மதி
சிந்தும் நிலவு நிறத்தினை — ஒளிர்
பத்தரை மாற்றுயர் பொற்சிலை — செய்ய
பட்டுத் துகில்நிற மேனியை — மிக
ஒத்தே இருக்கும் அழகினைக் — கண்டு
உள்ள மிசைக்குது காவியம்!

பாண்டிய ராசனின் வீச்சுவாள் — எறி
பட்டொளி தேங்கு விழிகளை — உளக்
கூண்டை உருவிட வீசுவாய் — தமிழ்க்
கூத்து முறைகளை ஆடுவாய் — என்
வேண்டுதல் ஏற்றிசை பாடுவாய் — கலை
வெள்ளம் மடைதிறந் தோடிட — உயிர்
தாண்டவ மாடுந் தமிழிலே — மனம்
தாவி யிசைக்குது காவியம்!

நீலக் கார்முகிற் கூட்டமோ? — என்
நெஞ்சம் புதைந்த பின்னலோ? — உன்
கோலக் கூந்தற் பரப்பிலே — கொடி
குலவு மல்லிகை பூத்திட — பூஞ்
சோலைக் காட்சி வெறுக்குது — கால்
சுற்றி உலவ மறுக்குது — என்
ஆழ நெஞ்செனும் பூங்குயில் — பண்
அயரப் பாடுது காவியம்!

காந்தட் கரங்களை ஆட்டுவாய் — என்
கற்பனைத் தேரைப் பூட்டுவேன் — பின்
தாந்தத் திங்கண தோமென — இணைத்
தாள் சிலம்பொலி கூட்டுவாய் — மற
வேந்தர் காத்த தமிழிலே — இதய
வீணை இசையை மீட்டுவேன் — மலர்
ஆய்ந்து கோத்த செந்தமிழ் — மணி
ஆர மாகுது காவியம்!



# அவள்

யாழ்ப்பாணன்

அன்பில் விளைந்த அமுதமடா
அழகில் மலர்ந்த கமலமடா
இன்பச் சுழலில் எனைமயக்கும்
இனிய தென்றற் போதையடா

நொய்யிடை துவளும் வல்லியடா
நுண்கவி மலரும் மெல்லியடா
பையவென் னுளத்திற் பரிமளிக்கும்
பாரொளிர் தெய்வக் கானமடா

புதுமை சொட்டும் பூவையடா
புலமை சொட்டும் பாவையடா
எதுகை மோனை என்றிவைகள்
இவளின் நடையிற் பிறக்குமடா

கணமவள் தனையான் பிரிந்தறியேன்
காரிகை தன்னை மறந்தறியேன்
குணமவள் செயல்கள் கொழிப்பனவால்
கோகுல மென்குல தெய்வமடா

எத்தனை ஜென்மம் தொடர்ந்தனளோ
எத்தனை ஜென்மம் கழிந்தனவோ
அத்தனை யொன்றும் நானறியேன்
அவளென் உயிருட லனைத்துமடா!

# வேதனைதான் வேதனமோ?

ஜீவா

பாட்டெழுதும் 'தமிழ்-வாத்தி' எங்களப்பா
பசிகிடந்து பழகியவள் ஈன்ற அன்னை
நாட்டிலுள்ள பணக்காரத் தோழி மார்மேல்
நகைகிடந்து குலுங்குவதை உற்று நோக்கி
வாட்டமுறும் கருவிழிகள் கையை நோக்க
வரிசங்குக் கழுத்தையது தடவிப் பார்க்கும்!
ஏட்டினிலே பாட்டெழுதும் எங்கள் வீட்டில்
'இல்லை'யென்ற பாட்டதுவே எதிரொலிக்கும்

கால்சட்டைத் துரைமாரின் குழந்தை குட்டி
காரினிலே பள்ளிக்குப் போகும் போது
மேற்சட்டைப் பீற்றலினைத் தொட்டுப் பார்ப்பேன்;
மெல்லடிகள் வெயில்காய்ந்து கருவா டாகும்
பூப்போட்ட பாவாடை ஏதெனக்குப்
பூச்சழகு என்னிடத்தில் துளியுமில்லை!
கூச்சமற்றுச் சொல்லுகின்றேன்; பெற்ற தாயார்
குடல்நிறையச் சாப்பிட்ட நாளேயில்லை!

முத்தூறும் கடல்சூழ்ந்த இந்த நாட்டில்
முத்தமிழைப் பாலகரின் உள்ள மேட்டில்
வித்தாக விதைக்கின்ற வித்தகர்க்கு
வேதனைதான் வேதனமோ? விளங்கவில்லை
"சத்தியமாய்ச் சம்வாதம் புரிவோம்" என்று
சட்டசபை மேற்கொண்ட எம்.பி. மாரும்
நித்திரையா கொள்கின்றார்? எந்தனுள்ளம்
நெக்குருகும் பரிதாபம் தீர்ப்பதென்றோ?

# நாமும் பிறந்தோமடி!

ராஜ பாரதி

பட்டப் பகலைப் போல
பளிங்கு நிலா வெறிக்க
மட்டக் களப் பாற்றில் — குயிலி
மச்சங்கள் பாடுதடி

ஊரிகள் ஒன்று கூடி
உல்லாச கீதம் பாடி
சீரை உயர்த்துதடி — குயிலி
செந்தமிழ் ஓசையடி

நீர் நிறை வயலிலே
நெற்கதிர் சாய்ந் தாடி
சேரி சிரிக்குதடி — குயிலி
செல்வங் கொழிக்குதடி

ஓங்கி வளர்ந்த தென்னை
ஓலைகள் காற்றசைக்க
ஏங்கிச் சலசலத்தல் — குயிலி
இன்னிசைக் கீதமடி

நாட்டுக் கவிகள் பாடி
நன்செய்வோ ரென்று கூடி
பூட்டுங் கலப்பையிலே — குயிலி
பூதலம் ஆளுதடி

சாமி விபுலா நந்தா
சனித்திட்ட மண்ணதனில்
நாமும் பிறந்தோ மடி — குயிலி
நடையிற் சிறந்தோமடி!

# மட்டக்களப்பு

ராஜபாரதி

'இலம்' என்றே ஏங்கியழு மூஞ்சிகட்கு
எள்ளிநகை யாடி "எந்தன் எல்லை யுள்ளே
குளமெல்லாம் தூர்ந்திருத்தல் பாரீர் - வந்து
குடியேற்ற வலைவீசல் பாரீர் - கொள்ளை
வளமுள்ள வயல், தோப்பு, வாவி சாரல்
வண்டல்வந்து தேங்குவது பாரீர் - ஏனோ
உளம்நொந்து வாடுநீர்" என்று கேட்கும்
ஊரெங்கள் ஊரியிசை பாடும் பொன்னூர்!

எழுவானில் ஆழிமடி திறந்து மார்ப்ப
எறிவலையைத் தோளேந்தித் தோணி யோட்டி
மலிவாக மச்சங்கள் கொண்டு மீண்டு
மனுக்குலத்துக் குணவீட்டு மக்க ளோடும்
துளிவானம் பெய்யாது பொய்த்திட் டாலும்
துரவுகிண்டி நீரள்ளித் தோட்டஞ் செய்யும்
சலியாத கமக்காரர் இலங்கும் நாடு
சாகாத தமிழ்பூத்துக குலுங்கும் நாடு!

பிட்டவிக்குங் குழலிடையே பிசைந்த மாவைப்
பிணைத்திருக்கும் தேங்காய்ப்பூத் தூரல் போல
ஒட்டியொரு மொழிபேசி இந்து - முஸ்லிம்
ஒருவயிற்றுச் சேய்களென வாழும் நாடு!
மொட்டவிழ வண்டுறிஞ்சும் நீர்மை போல
முதலளித்த போடிமார் முயற்சித் தேட்டை
பட்டடையிற் கட்டிவிடப் பாடு பட்டோர்
பசிகிடந்து பணிபுரியும் பண்பு நாடு!

பளிங்குநிலா கானகத்தே காயும் போது
பண்ணிசைத்துத் தமிழ்பாடும மீன்கள் உண்டு
களங்கமிலாச் சேரிவளர் பெண்கள் கூடிக்
'கா'போடும் நாவிசைக்குங் கான முண்டு
இளங்கதிர்கள் சாய்ந்தாடும் வயலைக் காப்போர்
ஏறுபரண் மேற்பாடும் தெம்மாங் குண்டு
முளங்குகின்ற காரெருமை மூழ்கி வாழும்
முப்பதுகல் நீளமுள்ள வாவி யுண்டு

கோயிலெல்லாம் பாரதமும் பயனும் கேட்கும்
குளங்களெல்லாம்கெண்டைவரால்குதித்துப்பாயும்
பாயிலெல்லாம் வெற்றிலையின் தட்டு மின்னும்
பழனமெல்லாம் பசுக்கூட்டம் பவனி போகும்
வாயிலெல்லாம் வெண்பட்டு மணலைக் கொட்டி
வாருகலாற் கோலமிட்ட வடிவு தோன்றும்
தாயகமே! மட்டுநகர் மண்ணே! பொன்னே!
தமிழ்ப்பண்ணே! தழைத்தோங்கி நீடுவாழி!



# பாதசரம் பறந்த கதை

ஜீவா

பாதசரம் எங்கேயெம் பண்பா டெங்கே?
பழந்தமிழூர்ச் செவ்வையெலா மெங்கே யென்று
வேதனையைக் கவியாக்கி வினவி நிற்கும்
வித்தகரே! விடைகேளீர்! ஆண்கள் செய்த
சோதனையைப் பொறுக்காமல் பிய்த்து வீசிச்
சுக்குநா றாகிடவே உடைத்து விட்டோம்
ஏதுமக்குப் பைத்தியமா? என்று கேட்பீர்
இல்லைஅந்த ஈனமதை இன்னுங் கேளீர்!

கண்ணகியின் கால்வாரிப் பிறந்த நாங்கள்
காற்சதங்கை பண்ணொலிக்கக், கைகள் பூண்ட
வண்ணவளை தாளமிட, வாசம வீசும்
வாயிதழ்கள் தமிழ்பேச வாழ்ந்தோம் எம்மை
எண்ணவில்லை ஏற்கவில்லை, எந்த ஆணும்
ஏறெடுத்தும் பார்க்கவில்லைச் சப்பாத் தோடு
மண்ணதிர நடைபோடும் மாதைக் கண்டு
மருண்டானெம் பண்பையெலாம் மறந்தான் காணீர்!

காற்சதங்கை ஒலிகேட்க வெறுத்தான், பட்டிக்
காட்டோசை கேட்குதென்று கேலி பேசி
நாற்சந்திக் கூட்டமதில் வட்டம் போடும்
நாரியரின் பின்னணியை ரசிக்கு மிந்த
ஆச்சரிய உலகமதில் ஆண்கள் வேட்கும்
ஆங்கிலயப் பூச்சினையாம் பூச லானோம்
கூச்சமற்றுச் சொல்கின்றோம்; கொண்ட வேஷம்
'கொழுகொம்பு' தனையிர்க்கு மாறே ஐயா!

கடல்கடந்தே இந்நாட்டு மண்ணில் வந்து
கலாச்சார வேரறுக்கும் மேலைத் தேய
உடல்மினுக்கும் பெண்ணழகை உற்று நோக்கி
'ஓம்'என்று தலையசைக்கும் தமிழன் போக்கைப்
படமெடுத்துக் காட்டுவது போல இந்நாள்
பாவையரும் ஆய்விட்டார்! பாத மெல்லாம்
குடலெடுத்த மச்சம்போற் கும்பிப் போச்சு
கோதையரை ஏனையா குற்றஞ் சொன்னீர்?

'ஈழத்துத் தமிழன்யான்' என்று சொல்லி
இறும்பூதும் இளங்கவியே! இந்த நாட்டுக்
காளையரின் மனப்போக்கை மாற்ற வேண்டிக்
கவியிசைத்துப் பாடுங்கள் அப்பா லுங்கள்
தோளிணையை மஞ்சமதாய்க் கொண்டு வாழுந்
தோகையரின் ஜோடனைக ளெல்லாம் மாறும்
யாழொலியைப் போட்டியிடுஞ் சிலம்பு வாழும்
யாம்வணங்கும் தமிழன்னை சாந்தி கொள்வாள்.



# கடற்கரைக் குடிசை வாயிலில்

யாழ்ப்பாணன்

கடலினில் மீனை நாடிச்
சென்றதன் கணவன் தன்னை
இடையினிற் குழவி யோடும்
ஏந்திழை வருகை நோக்கி
நெடியதன் கண்கள் சோர
நெடுந்திரை கிழித்துச் செல்லும்
படகினைக் காணு ளாகிப்
பைங்கொடி வாட்டங் கொள்ளும்

வாடையின் வரவு தன்னால்
வாரியும் வலிமை கொண்டு
கோடுயர் குன்ற மென்னக்
குதித்தெழும் அலைகள் வீசி
நாடியங் கணவற் கேங்கும்
நங்கையின் உள்ளத் தோடும்
கூடியே குமுறல் கொள்ளும்
கோதையைத் திகைக்க வைக்கும்

கணவனுங் கடலிற் சென்றான்
காரியை தன்னோ டுற்ற
குணமிகு தம்பி தானும்
கூடியே சென்றான் ஆங்கே
மணவினை முடித்துப் போந்த
மூத்ததன் மகனுஞ் சென்றான்
இணையிலா திவர்கட் கேங்கும்
ஏழையார் அறிவார் கொல்லோ?

கார்முகில் கவிந்து வானம்
கணத்திலோ ரிடியுங் கேட்க
மாரியும் புயலுங் கூடி
வருவதோர் தோற்றங் காட்ட
ஊரினின் கரையி லுள்ள
தருவதும் ஒடியக் கொம்பர்
பேரிரை வொன்று காணும்
பேதையாள் நடுக்கங் கொள்ளும்

தூரத்தோர் படகு தோன்றத்
துடித்திடு முள்ளத் தோடும்
சீரிய கணவன் சுற்றம்
என்றவள் திகைத்து நோக்கிப்
பேரருட் கடவுள் நாமம்
பேதையாள் பெரிதுஞ் செப்பும்
கார்முகி லிடையே வெய்யோன்
கணத்திலோர் ஒளியுங் காட்டும்.





EGYPT...Sailboats on a Nile Canal




# படகோட்டியின் தீபாவளி

ராஜபாரதி

ஓசைக் கடற்பரப்பி னோரத்தே ஓடத்தில்
வாசக் குழலழகி வந்திருந்து — வீசுவலைப்
பஞ்சணையிற் சாய்ந்து பவளவிதழ்த் தேன்மேய்ந்து
கொஞ்சி வழியனுப்பக்......குன்றன — நெஞ்சகலம்
பூரித்த ஏழையவன் 'பூங்கொடியே செங்கதிரோன்
காரிருக்கு முன்பே கரைவருவேன் — ஊரெல்லாம்
தீபா வளியாற் திருக்கோலங் காட்டுமடி
நாவாய் கடிதோட்டி நான் வருவேன் — சாவாலும்
மாறு உயிர்க்காதல் மாங்கனியே! என் அன்பே!
தாராய், விடை' யென்றே தண்டெற்றி — நீர்வலித்து
ஓடத்தே சென்றானே ஒய்யார வேல்விழியாற்
தேடிக் கடலளந்துந் தேராமல் — வாடிப்போய்
நின்றாள் சிலையாக நீரின் சுழித்திரைகள்
குன்று யுயர்ந்து குமுறுதல்போல் — அன்றெல்லாம்
நெஞ்சங் குமுற நிலைகொள்ளாக் காற்சிலம்பு
கொஞ்சுந் தமிழிற் குமுறியழ — வஞ்சியவள்
ஏங்கினாள் வீங்குகடல் எல்லையெலாம் பார்த்தாள்
ஓங்கி யறைந்தாள், ஒளிவதனம் — வீங்கியது
ஆவி கொடுத்து அலைகடல்மேற் சென்றோற்காய்த்
தேவிதனைப் பூசித்தாள் தீந்தமிழிற் — பாசமுடன்
தேவாரம் பாடித் திருவண்ணா மாமலையோன்
பாதார விந்தப் படிவீழ்ந்தாள் — காதோடு
கண்ணுக்கு எட்டாக் கடற்பரப்பி லோர்படகு
மின்னிற்று, கண்ணிணையைக் கூராக்கி — உன்னிப்பாய்
நோக்கினாள் நோக்கில் நொடிப்பொழுதில் தன்னுயிரை
நீக்கினாள் கண்டாள் நிலைகொண்டாள் — பூக்காடு

வாடியதன் கூந்தருக்கு வண்ணமலர் சூட்டுதற்காய்
ஓடிவரும் அன்பர்பட கோடிவர — நாடிப்போய்க்
கைத்தலத்தைப் பற்றிக் கடலரசைக் கும்பிட்டுப்
புத்தம் புதுவேட்டி பொற்சரிகை — வைத்தருகிற்
றைத்தகொரு மேலாடை தானுடுத்தி விட்டவனை
வைத்தவிழி வாங்காமல் வாஞ்சையொடு மைக்குறுங்கண்
அம்பா லடித்தாள் ஆடினாள் தென்பாங்கு
வம்பா யிசைக்க வாய்திறந்தான் —அன்போடு
தீபாவளி நாளைத் தித்திக்கப் பாடென்றாள்
கூவாமற் கூவுங் குயில்.



# காதல் போச்சோ


ராஜபாரதி

அஞ்சுகமே! என் அன்பே! அன்றோர்மாலை
அருவிவெட்டும் போதுவிழி யம்பைவீசி
நெஞ்சஅடிச் சுரங்கத்துக் கதவுபேர்த்து
நிலையான ஓர் இருக்கை தேடிக்கொண்டு
கொஞ்சுதமி ழனுராகத் தேன்துளிக்கக்
கூப்பிட்ட பூங்குயிலி! மெட்டிகொட்டும்
கஞ்சஅடி முடமாச்சோ? அன்னைபேச்சுக்
காதேற லாச்சோவுன் காதல்போச்சோ...?

ஊரோர ஆறோடி ஆழியோடும்
ஒன்றாகுந் தீரத்துப் பட்டுமண்மேல்
நீரோடும் கண்ணோடும் ஆவலோடும்
நெகிழ்ந்துள்ள நெஞ்சோடுந் தவங்கிடந்து
தூராகித் துரும்பாகித் தோலுள்வற்றித்
துவண்டாடு மெலும்புக்கூ டாகிவிட்டேன்
ஆரோடு சொல்லித்தான் அமைதிகொள்வேன்
அநியாய மாயென்னைக் கொல்கின்றாயே...!

உள்ளொன்றி யுணர்வொன்றி உயிருமொன்றி
உலகத்தி லுயர்வான பாசங்கொண்டால்
அல்லென்ன? பகலென்ன? அயல்வீட்டாரின்
அரட்டைக்குப் பயமென்ன? அருகில்வந்து
கொள்கண்ணே! என்கையைப் பற்றிநின்று
குதித்தாடிவ் வுலகத்தின் ஆதிக்கூத்தை!
நில்லாதே தனித்தங்கே! பிரிவினால்நான்
நீறாகிப் போய்விட்டா லேதுசெய்வாய்?

இரந்துண்டு வாழ்கின்ற பஞ்சையென்று
எனைவந்து சேருவதற் கஞ்சுகின்றாய்
திரண்டுள்ள புயமுண்டு சோம்பிவீழாத்
தேகத்தில் தமிழ்ரத்த முண்டுநாட்டிற்
பரந்துள்ள நிலமுண்டு நீருமுண்டு
பசிகொண்டு நீவாட விடுவேனோடி
சுரந்துள்ள அன்புன்னை வழிநடத்தும்
சுயபுத்தி யோடென்னை வந்துசேராய்...!



# எங்கு காண்பாய்?

ராஜபாரதி

'தாசுமகால்' கட்டமுதல் உண்மை யாயுன்
தங்கநிற மேனிக்கோர் உவமை யிந்த
ஆசியாவில் எங்கணுமே இருந்த தில்லை
'அஜந்தா'வின் சித்திரத்தில் கண்ட தில்லை!
வீசுமிளந் தென்றலுக்கு வசைந்து ஆடி
வீதியிலே நீபவனி போகுங் காட்சி
தேசமெலாஞ் சுற்றிடினும் காண லாமோ...?
தெரிசனந்தான் காணமற் றேய்கின் றேனே.

உண்ணுமல் இரவெல்லாம் உறங்கி டாமல்
உனைக்காணத் தவிக்கின்ற உள்ள மிங்கே
புண்ணுகிப் பொடியாகிப் புவனந் தன்னில்
புற்ருகிப் போயிற்றே...பூவாய் இன்னும்
கண்ணடிக் கன்னத்தாற் கடைக்கண் வீச்சால்
கற்பூரங் கமழும்தேன் கசியும் வாயால்
என்நோயைத் தீராத நீலி! என்னை
ஏனடி நேசித்தாய் சொல்லு, கண்ணே!

கொந்தளிக்கு மாழியிலோர் ஓடம், கோரக்
கூச்சலிடும் புலிக்காட்டில் ஒருமான் குட்டி,
வெக்கவியுஞ் சுவாலையிலோர் விட்டில், வெய்ய
விஷநாகக் கொடுவாயிற் தவளைக் குஞ்சு
இந்தரகப் பட்டியலில் எந்தன் சீவன்
ஏகாமற் கிடந்தின்னல் ஏற்கும் போதில்
உந்தனுக்கோர் உருகாத உள்ளங்கட்டி
உருக்காலோ வார்த்ததடி, சொல்லு கண்ணே!

சாகத்தான் போகின்றேன், என்னை நம்மூர்ச்
சாலையிலே பிணமாகக் காவிக் கொண்டு
போகத்தான் நீகாண்பாய்! பொங்குங் கண்ணீர்ப்
பொய்கையிலே என்னுயிரோர் பூவாய் மாறும்;
" ஆ! அத்தான் எனைவிட்டா போனீர் " என்று
அலறத்தான் போகின்ருய், அப்போ(து) அப்பூ
சோகத்தால் கருகிப்போய் வாடும், பின்னர்
சொர்க்கத்தில் வந்தாநீ என்னைக் காண்பாய்...?

---

# வீரத் தாலாட்டு

**ஜீவா!**

முத்துக்கும் வெண்முல்லைக் கொத்துக்குங் கோபம்
பொத்துக்கொண் டேவருமப் புன்முறுவல் காட்டி
தத்திச்சாய்ந் தாடியெனைத் தாவிமடி யேறித்
தாயமுதங் கேட்கின்ற தங்கப் பிழம்பே!
எத்திக்கும் புகழ்வைத்த இந்நாட்டு மண்ணின்
வித்துக்குள் துளிர்விட்ட வீரக் குமாரா!
கர்ச்சிக்குஞ் சிங்கத்தின் காலுக்குள் நின்று
கைப்பந்து ஆடிநீ காட்டும்நாள் என்றோ?

காட்டுக்கு வேட்டைக்குப் போனவுன் பாட்டன்
கரடியைக் கண்டதும் பிடரியைப் பற்றிப்
பாட்டிலே வீசித் துவைத்துப் பிழிந்து
பாரினில் வீரத்தை ஊட்டிய வீட்டில்,
ஆட்டுக் கடாவந்து கொம்பினை நீட்ட
அலறித் துடிக்கவா ஆணாகப் பிறந்தாய்?
ஈட்டி, வாள், அம்பு, உன் விளையாட்டுச் சாமான்!
ஏற்றுக்கொள்; "தூற்றிக்கொள் காற்றுள்ள போதே"

பால்குடிக் குஞ்சிறு பருவத்தி லுன்னைப்
பாய்கின்ற புலிக்காட்டு வேட்டைக் கனுப்பத்
தாய்நெஞ்சு துடிக்கின்ற தாலும்நீ இங்கே
தாழ்வாரப் பூனைக்கும் பயந்தோடு கின்றாய்!
நாய்நின்று 'வள்' ளென்று குலைக்கின்ற போது
நடுங்கும்உன் வாய்க்குநான் பாலூட்ட மாட்டேன்
"கூய்" என்று "காய்" என்று கத்திடுங் கோழை
குலத்தைக் கெடுக்கின்ற கோடரிக் காம்பு!

வீரத் தமிழ்த்தாயின் மார்பைக் குடித்து
வெற்றிப்பூந் தாராட வேண்டிய மார்பு
நாரைக் கழுத்தொப்பச் சூம்பிக் கிடந்தால்
நான்பெற்ற மகனென்று தாலாட்ட மாட்டேன்,
போருக்குப் பறைகொட்டப் புயம்வீங்கிச் சென்று
ஊருக்காய் மாண்டோர்தம் உதிரத்தின் சொட்டே
தேரைக்குந் தவளைக்கும் திடுக்குற்றாய்? அன்னார்
தீரத்தைக் கண்ணாரக் காணுநாள் என்றோ!

# கதிர்காமம் சென்று வருவாய் !

யாழ்ப்பாணன்

புலியொடு கரடி யானை
புள்ளிமான் பலவும் மேவி
விலகியுங் கூடி யாங்கே
வேற்றுமை காட்டா வாகி
உலவுநல் நதியி னோரம்
ஒன்றினோ டொன்று பின்னிப்
பலவகைத் தருக்க ளோங்கும்
கானத்தின் பகுதி தன்னில்

அன்னமென் னிடையாள் வள்ளி
அழகிய சிறுக்கி யோடும்
மன்னுயிர் வாழ வைக்கும்
வேலவன் வதியுங் கோயில்
என்னரு மன்பே சென்று
தொழுதுநீ இன்பங் காண்பாய்
உன்னுயி ரன்பன் வாழ
உத்தமி வரங்கள் கேட்பாய்

இன்னொரு நாளிற் செல்வோம்
இறைவிதன் அருளை வேண்டி
அன்னரு நாளி லன்பே
தடுப்பன அவனிக் கில்லை
மன்னுயிர் காக்கும் வேலன்
நாயகி மனது வைத்தால்
பின்னொரு குறையு முண்டோ
பெரிதவள் அருள்தான் காண்பாய்

முருகனின் முறுவல் தோற்றம்
முதல்விநீ முன்னர்க் காண்பாய்
அருள்பொழி முகங்க ளாறும்
அழகிய கையில் வேலும்
மருவிய வள்ளி தெய்வ
யானைமற் றிருவர் சேரும்
திருவுரு பின்னர்க் காண்பாய்
தெய்வத்தை யேத்தல் செய்வாய்

வானுயர் கொடியே போற்றி
வையத்தின் வாழ்வே போற்றி
கானவர் பிடியே போற்றி
கற்பகத் தருவே போற்றி
தேனொடும் தினையின் மாவைச்
சிவன்மைந்தற் கீந்தாய் போற்றி
ஈனனென் னுள்ளங் கொண்ட
இன்பமே போற்றி போற்றி!

போற்றிநீ போற்றி யென்றே
பொற்கொடி தன்னை யேத்தி
ஊற்றெடுத் தெம்மை யாழ்த்தும்
கவலைகள் ஒடுங்க வைப்பாய்
ஆற்றினின் கரையி னோரம்
அழகிய கோயில் வைகி
நாற்றிசை புரக்கும் வேலன்
நாயகி வரங்க ளீவாள்.

———

# குடிசையில் சுவர்க்கம்

**யாழ்ப்பாணன்**

பரந்த கடலழகில்
பற்றியுளம் பாயுதடி
விரிந்த வயலழகில்
விழைந்தெனுளம் வீழுதடி
சரிந்த மலைகளிலே
தாவியுளம் சாருதடி
கரந்த வாழ்வதனைக்
கட்டறுத்தும் ஓடுதடி

ஒருகுடிசை அமைத்திடவே
உளம்பறந்து செல்லுதடி
இருமருங்கும் இயற்கையெழில்
என்னுளத்தை ஈர்க்குதடி
விரைமலரின் வாசனைகள்
வெறியெனக்கு மூட்டுதடி
அருகமரும் கிளிமொழியுன்
அமுதமொழி சுவர்க்கமடி

வண்டினங்கள் இன்சுருதி
மகிழ்வுதரும் பாடலடி
கொண்டலசை குமுறல்களே
கொட்டுமுயர் முழவமடி
அண்டர்களும் வியப்புறவே
அருந்தமிழைச் சுவைத்திடுவோம்
எண்டிசைக்கும் இன்பெருக்கி
இன்கவிகள் இசைத்திடுவோம்

தென்றலுடன் தவழ்ந்திடுவோம்
தேன்சுனையில் திளைத்திடுவோம்
குன்றுகளில் உருண்டிடுவோம்
கொழுகொம்பில் தாவிடுவோம்
அன்றிலெனும் பறவைகளாய்
அருகணைந்து மகிழ்ந்திடுவோம்
ஒன்றியொரு சோடிகளாய்
உலகனைத்தும் உவந்திடுவோம்

எனையணைந்து சேர்ந்திடடி
என்குயிலி விரைந்திடடீ
தனியெனக்கு வழித்துணையாய்
சகமுளநாள் சார்ந்திடடீ
சுனைகளிலே வீழ்ந்திடுவோம்
தோய்ந்திடுவோம் பாய்ந்திடுவோம்
நினைவதனி லொன்றெனவே
நீளிறக்கை அடித்திடுவோம்

பாட்டிசைப்போம் பண்ணொலிப்போம்
பறந்துவெளி திரிந்திடுவோம்
கூட்டிசைப்போம் குதூகலிப்போம்
குயிலினமாய் குலவிடுவோம்
நாட்டிலுறு வளங்களெல்லாம்
நமதுயர்ந்த செல்வமடி
மேட்டளந்து காட்டளந்து
விண்ணளந்து விரைந்திடுவோம்

திறந்த பெருவெளியில்
தில்லைநடம் தோன்றுதடீ
உறைந்த முகிலழகு
உமைவிரிக்கும் கூந்தலடீ
சிறந்த சுவர்க்கமதைச்
சிறுகுடிசை காட்டுமடீ
நிறைந்த பேரழகை
நித்தியமும் தொழுதிடுவோம்!



# புதுமைப் பெண்

யாழ்ப்பாணன்


வாழிநீ வாழி! பல்லாண் டிங்கே
வையகந் தழைத்திட வருத்தமஃ தகல
ஏழைகள் வீட்டில் இரப்பவர் குடிசையில்
இருநிதி படைத்த செல்வர்தம் மனையில்
ஆழி செலுத்தியே அரிவைநீ வாழி!
அனைவருஞ் சமமென அகத்திற்கொள்ளுதி
ஊழிய காலம் உன்னுர சோங்க
உத்தம மகளே! உலகிடை வாழி!

சீதையி னம்சமே! திரௌபதி யம்சமே!
திறன்மிகு நமனைத் திகைத்திட வைத்த
சோதியாஞ் சாவித் திரியவ ளம்சமே!
சுடரென வொளிருந் தோகைய ரம்சமே!
பேதைகள் பெண்ணெனப் பிழைபடச் செப்பும்
பெருமிதம் பிடித்தவர் சிரமதைத் தாழ்த்திட
ஆதியாய் நிற்கும் அன்னையி னம்சமே!
அவனியி லறிவொளி பரப்பிநீ வாழி!

மாதர்தம் அறங்கள் வையத்தி லோங்கிட
மடமையும் மற்றுள தாழ்வெலா மகன்றிட
வேதத்தி லுள்ளன விதியெலா மோம்பியே
வெறுப்பவர் தஞ்சிரந் தாழ்ந்துனை வணங்கிடச்
சாதத்தி னேடு தருமமும் வாழ்வும்
சார்ந்துள தெய்வச் சாதியும் படைத்துநீ
பாதத்தி லசைவுறு கிண்கிணி யார்ப்பப்
பாவையே பாரினைப் புரந்துநீ வாழி!

புலவர்தம் செல்வியே! புத்தொளி விளக்கமே!
புவியினிற் பாரதி போற்றுயர் நங்கையே!
இலரிவர் உளரிவர் என்பன மாற
யாவரு மிகத்தில் இந்திர ராக
நிலமதிற் செம்மை அறங்களை வளர்த்துநீ
நீணிலந் தன்னில் நின்னர சாண்டு
அலகிலா ஜோதியாய் அமரராய் அனைவரும்
அவனியி லொளிர்ந்திட அணங்கனை வாழி!

போற்றி போற்றி பொன்னடி போற்றி
புதுப்புது வாழ்வினை வகுப்பனை போற்றி
தூற்றிடு வாழ்வுந் தூசியாய்ப் பறந்திடச்
சுவர்க்கமும் போகமுந் துன்னியே சேர்ந்திடக்
காற்றினில் மலரினில் களித்திடு பொய்கையில்
கனவினில் நனவினில் கவிஞெளி வீசி
நாற்றிசை புகழ்ந்திடு நங்கைநீ வாழி!
நான்முகன் படைப்பின் நற்பயன் வாழி!



யாழ்ப்பாணன் புனைந்துள்ள

## மாலைக்கு மாலை

○

புதுமணத்
தம்பதிகளுக்கேற்ற
பரிசுப் புத்தகம்

**விலை ரூ. 2-50**

---

## பாலர் கீதம்

○

குழந்தைகள்
குதித்துப்பாடும் பாடல்கள்
நிறைந்துள்ளது.

**விலை 80 சதம்**

---

## கண்ணன் பாட்டு

○

**விலை 30 சதம்**

---

பிரபல புத்தகசாலைகளிலும்
பெறலாகும்.

○

**வடலங்கா புத்தகசாலை,**
பருத்தித்துறை.

---

ஜீவா - யாழ்ப்பாணன்

# முல்லைக் காடு

பிரசாரம் - கலாபவனம் - பருத்தித்துறை - இலங்கை.